இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 12 | திகதி : 09.08.2020 | விலை : 30.00

## இலங்கையின் 16 ஆவது பாராளுமன்றத் தேர்தல் 2020

- பாரிய வெற்றியை ஈட்டியது "மொட்டு"
- படுதோல்வி கண்டது "யானை"
- சுதாகரித்துக் கொண்டது "தொலைபேசி"

**வடக்கில்**

- "வீடு" பின்னடைவு
- "சைக்கிள்" முன்னேற்றம்
- "வீணை" வளர்முகத்தில்
- "கை" அதிர்ச்சி வெற்றி
- "மீன்" நிலைபெற்றது

**மக்கள்...?**

சமகாலப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ புதிய பிரதமராகச் சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணத்தில் அதிகளவு செல்லுபடியற்ற வாக்குகள்

தேர்தல் முடிவுகளின் கண்ணோட்டம் பக்கம் 06, 07 இல் காண்க...

## மறைந்த யாழ்., மன்னார் மறைமாவட்ட இறைபணியாளர்களின் வரலாற்றுப்பதிவு நூலாகியது



யாழ். மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றி மறைந்த இறைப்பணியாளர்களின் வரலாற்றுப் பதிவுகளை உள்ளடக்கிய 'PIONEERS AND PREDECESSORS' என்ற தலைப்பில் அமைந்த நூல் வெளியீட்டு விழா யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நூல் யாழ். மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றி இறையடி சேர்ந்த 60 மறை பணியாளர்களின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள் வெவ்வேறு அருட்பணியாளர்களால் எழுதப்பட்டு அருட்திரு ஞா. பிலேந்திரன் அடிகளாரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களும், சிறப்பு விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குருக்கள் மன்றத் தலைவர் அருட்திரு A.F. பெனற் அடிகளின் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் யாழ். மன்னார் மறைமாவட்டக் குருக்களும் மறைந்த குருக்களின் பெற்றோர் சகோதரர்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



*யாழ்., மன்னார் மறைமாவட்டங்களில் பணியாற்றி மறைந்த இறைப்பணியாளர்களின் வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட மறைந்த குருக்களின் பெற்றோர் சகோதரர்கள், உறவுகளை யாழ்., மன்னார் ஆயர்களுடன் படத்தில் காண்க.*

## தலவில அன்னாள் ஆலயப் பெருவிழாவில் யாழ் ஆயர்



தலவில்ல புனித அன்னாள் வருடாந்தத் திருத்தலத் திருவிழா கடந்த 02.08.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. இத் திருவிழாத் திருப்பலியை யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களும் சிலாப மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை அவர்களும் இணைந்து சிங்கள, தமிழ் மொழிகளில் ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழாத்திருப்பலி இறுதியில் புனிதையின் இறுதி ஆசீரை யாழ். ஆயர் அவர்கள் வழங்கி நின்றார்.

## சுற்றுச் சூழல் ஆன்மீகத்தை ஊக்குவிக்கும் குழு

சுற்றுச் சூழல் ஆன்மீகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நாளாந்த வாழ்வில் அதனைக் கடைப்பிடிக்கவும் இறைமக்களை ஊக்குவித்து நடாத்துவதற்காக யாழ். மறைமாவட்டக் குருக்கள் மன்றத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக் குழுவின் அங்கத்தவர்களாக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் அருட் பணியாளர்கள் A.F.X. ஜெயசேகரம், கி. யோ. ஜெயக்குமார், எஸ். இயூஜின் பிரான்சிஸ் , எஸ். ஏ. றொஷான், எஸ். செபஜீவன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் தலைமையிலான இக்குழுவினரால் பங்குமட்டங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பராமரிப்பில் மனித இனம் காட்டும் அசட்டைப் போக்கினாலேயே இன்றைய உலகம் பல அழிவுகளுக்குள்ளாகி வருகின்றதென்பதை அனைவரையும் உணரவைத்து நாம் வாழும் பூமியைப் பத்திரமாகப் பராமரித்து எமது எதிர்கால சந்ததிக்கு ஒரு வளமான பூமியை உருவாக்கிக் கொடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சுற்றுச் சூழல் பராமரிப்பை வலியுறுத்தி "இறைவா உமக்குப் புகழ்" (Ladato Si) என்ற சுற்றுமடலை வெளியிட்ட ஐந்தாவது ஆண்டு நிறைவில் உலகத் திருஅவை முழுவதும் இச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டி வருவது இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.

## அருளடையாளங்கள் இலவசமாகவே வழங்கப்பட வேண்டும்

### அருட்பணியாளர்களுக்கு வத்திக்கான் அறிவுறுத்தல்

அருட்பணியாளர்களுக்கான திருப்பீடப்பேராயம் அண்மையில் வெளியிட்டுள்ள **"நற்செய்தி அறிவிப்புப் பணியில் பங்குத்தள சமூகத்தின் மேய்ப்புப்பணிக்குரிய மாற்றங்கள்"** என்ற ஏட்டில் அருளடையாளங்களை நிறைவேற்றும்போது அருட் பணியாளர்களோ, பங்கு நிதி நிர்வாகமோ எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது என்றும், அருளடையாளங்கள் திருஅவையின் இலவசமான கொடைகளே என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதுதவிர, திருமுழுக்குப் பெற்றோரின் கடமைகள், மறைபணியின் புதுப்பித்தல், பங்குத் தளங்களில் உள்ள வெவ்வேறு சமூகங்களின் பொறுப்புகள் மேய்ப்புப்பணி, சார்புடைய மாற்றங்கள், வெளிப்படையான நிதி நிர்வாகம் போன்ற விடயங்கள் இவ் ஏட்டில் விவரிக்கப் பட்டுள்ளன.

## பெண்களுக்கு சம உரிமை வழங்கிய திருத்தந்தை

வத்திக்கானின் பொருளியல் மன்றத்தை உருவாக்கிய திருத்தந்தை அதன் அங்கத்தவர்களாக நியமித்த ஏழு பொதுநிலையினரில் அறுவர் பெண்களாவர். திரு அவையின் மேல்மட்ட செயற்பாடுகளில் கடந்த காலங்களில் பெண்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் திருத்தந்தையின் இந் நியமனங்கள் ஒரு பெரிய திருப்புமுனை எனப் பலரும் கருதுகிறார்கள்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## தற்காலிகமாக ஒதுங்கியிருந்த இனவாதமும் தேர்தல் வெற்றியும்

மாற்றம் என்று கூறியும் நிலைமாறுகால நீதிகிடைக்குமெனவும் மார்தட்டிக் கொண்டு இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளின் ஆதரவோடு 2015ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மைத்திரி-ரணில் அரசாங்கம், நினைத்ததைச் சாதிக்கவில்லை. புதவிக்கு வந்த மூன்றாம் மாதம் ஆரம்பித்த மைத்திரி- ரணில் முரண்பாடு, ராஜபக்ச குடும்பத்திற்கும் அந்தக் குடும்பத்தை நம்பி அரசியலில் ஈடுபட்டிருந்த ஆதரவாளர்களுக்கும் வரப்பிரசாதமாகவே அமைந்தது. அதன் பெறுபேற்றை, 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இருநூறுக்கும் அதிகமான சபைகளைக் கைப்பற்றி ராஜபக்ச அணி வெளிப்படுத்தியது. தமது அதிகாரத்தை மீண்டும் நிரூபித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைத் துணிவோடு தூக்கி எறிந்து விட்டு வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியோடு சங்கமித்து மைத்திரிபால சிறிசேன ஆட்சியை அமைத்ததால், ராஜபக்ச குடும்பத்துக்கு கோபம் இருந்திருக்கலாம். ஆனால் இதற்கெல்லாம் காரணம் என்று கருதப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீதும் அவருடைய தந்தையார் ஆரம்பித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் ஏற்பட்ட அதிருப்தியும் வெறுப்புமே, 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி ராஜபக்ச குடும்பம் தங்களுக்கென்று தனியொரு கட்சியை ஆரம்பிக்க உந்து சக்கதியானது. அதுவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1952ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதியன்றே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சி பசில் ராஜபக்சவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மூலம், 2005ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்த மகிந்த ராஜபக்ச அந்த ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதிவியேற்றபோது, கூறிய வாசகத்தை 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நிறைவேற்றி யிருக்கிறார். சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தபோது பெரும் இழுபறிகள். முரண்பாடுகளுக்கு மத்தியில் அன்று ஜனாதி-பதி வேட்பாளராக நியமனம் பெற்றிருந்த மகிந்த ராஜபக்ச, தேர்தலில் வெற்றிபெற்று பதவியேற்றிருந்ததும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் புணரமைக்க வேண்டுமெனக் கூறியிருந்தார். 2010ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தபோது. அம்பாந்தோட்டையை மையப்படுத்திய புதிய கட்சி ஒன்றின் உருவாக்கம் பற்றியும் பிரஸ்தாபித்திருந்தார்.

மூன்றாவது முறையாகவும் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் எனக் குறிப்பிட்டு ராஜபக்சவின் அரசாங்கம் 2014இல் உருவாக்கிய 18ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். தோல்வியென அறிவிக்கப்பட்ட அன்றைய தினமே தனது சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் உள்ள மெதமுன இல்லத்திற்குச் சென்றிருந்த மகிந்த ராஜபக்ச நேரடியாகவே இந்தியா மீது குற்றம் சுமத்தியதோடு, மீண்டும் வருவேன் எனவும் சூளுரைத்திருந்தார். அன்று மகிந்த ராஜபக்சவுக்கு இரண்டு பிரச்சினைகள் இருந்தன. ஒன்று போர்க்குற்றம், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடுவது. அதற்கேற்றமுறையில் சர்வதேச சமூகத்தை இலங்கை அரசாங்கத்தின் பக்கம் வரவைப்பது. இரண்டாவது. சந்திரிகாவுக்கு எதிரான போராட்டம். அதாவது சந்திரிகாவின் தந்தையார் பண்டாரநாயக்கா உருவாக்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி அதற்கு மாற்றீடாக ராஜபக்ச குடும்பத்தை மையப்படுத்திய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கி அதனைத் தேசியக் கட்சியாக மாற்ற வேண்டும் என்பது.

ஆனால் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட தோல்வி மகிந்தவுக்கு, அந்த முயற்சிகளின் அடைவை எட்டமுடியாமல் போய்விட்டது. ஆனாலும் நல்லாட்சி என்று மார்தட்டிய மைத்திரி-ரணில் அரசாங்கத்தின் பலவீனங்களை நன்கு பயன்படுத்திய மகிந்த இன்று இலங்கை அரசியலின் கதாநாயகனாக மாறிவிட்டார்.

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரனை வழங்கியிருந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதற்குஒத்துழைத்தது. இதன்பெறுபேறாகசர்வதேசவிசாரணைஅல்லது இனப்படுகொலை குறித்த விசாரணை கைவிடப்பட்டது. இலங்கையின் மனித உரிமைப் பிரச்சினையாக மாத்திரம் நோக்கப்பட்டு, அது உள்ளக விசாரணையாக அல்லது சர்வதேசத்தையும் உள்ளடக்கிய கலப்பு விசாரணைப் பொறிமுறையாகவும் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் தமிழர்களுக்கான நிலைமாறுகால நீதி இன்றுவரை கிடைக்கவில்லை. ஆட்சியும் மாறியுள்ளது.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

## இளவாலை மறைக்கோட்ட ஓவியப்போட்டி முடிவுகள்

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் அனுசரனையுடன் இளவாலை மறைக் கோட்டத்தினால் மாசி மாதம் 2020ல் நடாத்தப்பட்ட ஓவியப்போட்டியில் முதல் மூன்று இடங்கள் பெற்ற பங்கு மாணவர்களின் பெயர் விபரங்கள் :

| | மாணவர் பெயர் | பங்கு | நிலை |
|---|---|---|---|
| பிரிவு I | அ.லிடியா | சுன்னாகம் | 1 |
| | ஜெ.பிரசன்னா | ஆனைக்கோட்டை | 2 |
| | ர.றம்மியா | ஆனைக்கோட்டை | 3 |
| பிரிவு II | ப. ஆன் ஜெரால்டின் | மானிப்பாய் | 1 |
| | வி. யனுசியன் | குழமங்கால் | 2 |
| | A. கியுறிகா | ஆனைக்கோட்டை | 3 |
| பிரிவு III | C. சனாஸ் | சுன்னாகம் | 1 |
| | வி. அலன்பீற் | குழமங்கால் | 2 |
| | ஜெரோன்தோமஸ் | குழமங்கால் | 3 |

இளவாலை மறைக் கோட்ட பொதுநிலை யினர் கழகத்தினால் பங்குகளில் நடாத்தப்பட்ட ஓவியப்போட் டிக்கு ஒத்துழைப்பு வழங் கிய மறைக்கோட்ட முதல் வர் அருட்பணி ம.யேசுரட் ணம் அடிகளார், மறைக் கோட்ட பொதுநிலையி னர் கழக இணைப்பாளர் அருட்பணி றெக்னோ அடி களார் மற்றும் பங்குத் தந்தையர்கள், பொது-நிலையினர் கழகப் பங்கு பிரதிநிதிகள், மறையாசிரி யர்கள், மாணவர்களுக் கும் எமது மறைக்கோட்ட பொது நிலையினர் கழ கம் சார்பில் நன்றியைக் கூறிக்கொண்டு, பிரிவு ரீதியாக முதல் மூன்று இடங்களைப்பெற்றமாண வர்களை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகம் வாழ்த்தி நிற்கின்றது.

**பெயர் பொறிக்கப்பட்ட மெழுகுவர்த்திகள் விற்பனைக்கு**

திருமண விழா, திரு முழுக்கு - முதன்நன்மை விழா, பிறந்த தினவிழா ஆகியவற்றில் பயன்படும் மெழுகுவர்த்திகளில் உங் கள் பெயர்கள், படங்கள் அழகாக பொறித்து கத் தோலிக்க அச்சகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

## 2020 - இலங்கை பாராளுமன்ற தேர்தல் முடிவுகள்


| கட்சி | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | 6853693 | 145 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2771984 | 54 |
| தேசிய மக்கள் சக்தி | 445958 | 3 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 327168 | 10 |
| ஐக்கிய தேசிய கட்சி | 249435 | 1 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 67766 | 2 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 61464 | 2 |
| தமிழ் மக்கள் தேசிய கூட்டணி | 51301 | 1 |
| சிறீலங்கா சுதந்திர கட்சி | 66579 | 1 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 67692 | 1 |
| சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | 34428 | 1 |
| MNA | 55981 | 1 |
| ACMC | 43319 | 1 |
| NC | 39272 | 1 |
| OPPP | 67758 | 1 |

## பெரியவிளான் புனித அந்தோனியார் பங்கில் இவ்வருடம் இரு குருமணிகள்

பெரியவிளான் புனித அந்தோனியார் பங்கைச் சேர்ந்த அருட்பணி பிரான்சிஸ் றீசன் நிதர்சன் அவர்களும், அருட்பணி யோசவ் டிலான் றோஜன் அவர்களும் இவ்வருடம் (2020) யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் அருட்பொழிவு செய்யப்பட்டனர்.

பெரியவிளான் பங்கு பண்டத்தரிப்பு பங்குடன் இணைந்து கடந்த 60 ஆண்டுகளாக செயற்பட்டு வந்த போதிலும் 2010ம் ஆண்டு பெரியவிளான் பங்கு தனியாகப் பிரிக்கப்பட்டு முதல் பங்குத்தந்தையாக அருட்பணி R.M.G. நேசநாயகம் அடிகளினால் பொறுப்பேற்கப்பட்டு அவரது ஆன்மீக வழிகாட்டலின் கீழ் குருமடத்திற்கு மாணவர்கள் இணைகக்கப்பட்டு கடந்த எட்டு வருடங்களுக்குள் பெரியவிளான் புனித அந்தோனியார் பங்கில் நான்கு குருக்கள் உருவாகியமைக்காக புனித அந்தோனியார் பங்கு மக்கள் தமக்கு இறைவன் அளித்த மாபெரும் இறை கொடையாகக் கருதி இறைவனுக்கு நன்றி செலுத்துகிறார்கள்.

## சிந்திக்க ஒரு சித்திரம்



# காவலன் கலசம்

## எமது பிரதேசத்தை உலுக்கிய விபத்துக்கள் சில......

❍ ஆகாஷ் மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல்துறை 3ம் வருட மாணவன்.

❍ தேசிய மட்டச் சாதனை வீரன். பெற்றோருக்கு ஏக புத்திரன். ஒரு பொழுது நண்பருடன் மகிழ்ந்திருக்கப் புறப்பட்டவன். சில மணியில் உயிரிழந்தான்.

❍ கோப்பாய் எரிபொருள் நிலையத்தில் இருந்து வீதிக்கு நகர்ந்தபோது விபத்தில் மரணித்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர்.

❍ வவுனியா பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி வவுனியாவிலிருந்து கொழும்பு செல்லும் வழியில் விபத்தில் சிக்கி மரணமானார்.

❍ அவருடன் பயணித்த அவரது பெறாமகள், க.பொ.த உயர்தரப்பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி அதே விபத்தில் உயிரிழந்தார்.

❍ பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட பொறியியலாளரும் நண்பர்களும் ரயில் மோதி மரணித்தனர்.

❍ ஜேர்மனியில் இருந்து வந்த உறவுகளும் அவர்களை அழைத்து வரச் சென்றோரும் ஹயஸ் வானுடன் ஹன்ரர் மோதி மரணம்.

❍ குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்.

இப்படியல் தொடர்ந்து நீண்டு கொண்டே செல்கின்றமை நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.

**இந்த விபத்துக்களில் இறந்துபோனவர்கள்அனைவரும்எமதுசமூகத்தின் சொத்துக்கள் அல்லவா.**

**விபத்து!**

**ஓர் அனர்த்தம்!!**

இது ஒரு செயற்கை அனர்த்தம். அதாவது மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தம். எனவே தவிர்க்கப்படக்கூடியது.




# விபத்து ஓர் அனர்த்தம்

விபத்துக்கள் பல வகைப்பட்டவை. அவற்றில் ஒன்றே வீதி விபத்துக்கள்.

⌘ இலங்கையில் 3மணித்தியாலத்திற்கு ஒரு வீதி விபத்து நிகழ்ந்து கொண்டிருப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

⌘ வீதி விபத்துக்கள் பெரும்பாலும் மனிதர்களின் பாதுகாப்பற்ற நடத்தைகளினாலேயே நிகழ்கின்றன.

எனது மற்றும் சமூகப் பாதுகாப்பிற்காக நான் எனது விழிப்புணர்வுடனான நடத்தைகளால் விபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களைக் குறைக்க முடியும் அல்லவா.

**பப்சி மரியதாஸ்**

**சில உண்மைகள் கொரோனா**

கிருமித் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்க எத்தனை விழிப்புடன் செயற்படுகிறோம். செயற்பட அறிவுறுத்தப்படுகிறோம். இலங்கையில் கடந்த 6 மாதங்களில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 மட்டுமே.அதே காலப்பகுதியில் வீதி விபத்தினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 379 எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்றாடம் கொஞ்சம் கொஞ்சமாக சமூகத்தின் மனித வளத்தை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கும் இக் கொடிய அனர்த்தத்திற்கு எதிராக நாம் என்ன செய்கிறோம்?

**எம்மை நோக்கிச் சில கேள்விகள்**

◆ விபத்து மனித நடத்தைகளால் உருவாக்கப்படுவது தவிர்க்கப்படக்கூடியது என்பதை ஏற்றுக்கொள்கிறோமா?

◆ வெள்ளை நிறத்தில் பளிச்சிடும் பாத சாரிக் கடவைகள் ஊடாக மட்டுமே எத்தனை பேர் வீதிகளைக் கடக்கிறோம்?

◆ தலைக்கவசம் இல்லாமல் ஏன் மோட்டார் சைக்கிளில் பயணிக்க முற்படுகின்றோம்?

◆ வீதியில் குறிப்பிடப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாட்டிற்கு அமைவாக எத்தனை பேர் எமது வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறோம்?

◆ வேலைக்குச் செல்லும் எத்தனை பேர் கையெழுத்திடும் ஒரு நிமிடத்திற்காய் எமது வாகனத்தின் வேகத்தை அதிகரிக்காது இருந்திருக்கிறோம்?

◆ ஒளிச்சமிஞைக்காய் நிற்கும் வேளையில் ஒரு நிமிடத்திற்காக சலித்துப் புறப்படத் துடிக்கிறோம் அல்லவா?

◆ ஒரு வழிப்பாதையில் விரைவாகச் செல்லத் தயக்கமின்றி முற்படுவது ஏன்?

◆ போதையுடன் வாகனம் ஓட்டத் துணிவது ஏன்?

**சிந்திப்போம்.**

◆ *மாற்றம் இன்றிலிருந்து.........*

◆ *மாற்றம் என்னிலிருந்து............*

# உடம்பு முழுக்க நோகுதாம்...

துருவேறிக்கிடக்கும் இந்த ஜன்னல் கம்பிகள் வழியே இமை நரைத்துப்போன கண்களால் எட்டிப் பார்க்கும் போதெல்லாம் நெஞ்சுக்குள் ஏதோ வந்து அடைக்கிறதா? ஒரு அழகான பட்டாம் பூச்சிக் கனவொன்று சிறகு பிய்ந்து கண் முன்னே கிடக்கிறதா?

ஆடை நனையுமென்று அம்மா பேசுவார் என்பதற்காக ஒருபோதுமே நனைந்து பார்க்காத அந்த அத்தனை மழைகளும் இன்று கண்கள் வழியே ஈரமாய் கசிகிறதா? கைத்தடியின் உதவியின்றி நடக்க முடியாத நடுக்கம் நிறைந்த ஒரு பின் இரவில் சட்டென்று கண்விழித்துப்



பார்க்கையில், படுக்கை விரிப்பைப் போலவே வாழப்படாத நேற்றைய வாழ்க்கையும் கசங்கிக் கிடப்பதைப் பார்த்து திடுக்கிட்டுப் போனதுண்டா?

உங்கள் வாழ்க்கையின் இரகசியத்தை மெல்லிய குரலில் யாரோ ஒருவருக்குச் சொல்லும்போதெல்லாம்; “எனக்கு உண்மையாகவே விருப்பமில்லை. அப்பாவுக்கு விருப்பம். அதோட, ஊர் ஆக்கள் ஏதாவது கதைப்பினம் எண்டதுக்காகத்தான் ஓம் எண்டனான். எனக்கு இன்னுமொரு நரகம் இருக்குமெண்டு நான் நினைக்கேல. இப்பிடி வாழுறதுக்கு எப்பவோ செத்திருக்கலாம். என்ன செய்யிறது பிள்ளைகளுக்காக வாழுறன்” என்ற வரிகள் வருகிறதா? கண்ணீர் ஒட்டிக் கிடக்கும் அந்தப் பழைய கதைக்குச் சொந்தக்காரியிடம் கேட்டுப் பாருங்கள். தொலைத்த அந்த இடத்தில் இன்னமும் அவள் வாழ்க்கையைத் தேடிக்கொண்டே இருக்கிறாள். காய்ந்து போன வெறும் புழுதியைத் விர வேறு எதுவும் அவள் கைகளில் அகப்படப் போவதேயில்லை.

அடுத்தவர் உங்களைப் பற்றி ஏதாவது பேசுவார்களோ? இதைச் செய்தால் என்னைப் பற்றி என்ன நினைப் பார்கள் என்ற தீராப்பயத்தோடே பலரது அழகழகான வாழ்க்கைகள் வாழப் படாமலே வாடிப் போய் இருக்கின்றன. நான் இப்படி வாழ்ந்தால் அவருக்குப் பிடிக்காது என்பதால், யார் யாரிடமோ நல்ல பெயர் வாங்கிவிட வேண்டுமென்ற அடிமை மனநிலையில் எனக்குப் பிடித்த என் ஆன்மாவுக்கு நெருக்கமான வாழ்வை நான் கடைசி வரை வாழாமலே தொலைத்து விடுகின்றேன்.

பின் தோல் சுருங்கிய வயோதிபத்தின் மரணப்படுக்கையில் விரல் நடுங்கியபடி, தூரப் பறந்துபோன வாழ்வைக் காற்றில் துலாவும் விரல்கள் எத்துணை பரிதாபமானவை. வெறுமையை, ஏமாற்றத்தைத் தவிர எதுவுமே அகப்படப் போவதில்லை என்ற உண்மை எவ்வளவு சோகமானது.

வாழ்வு என்பது ஒரே ஒரு முறை கிடைக்கிற வரம்தானே. யாரோ நான்கு பேர் நான்கு விதமாகப் பேசிவிட்டுப் போகட்டுமே. கடவுளுக்கும் உன் மனச்சாட்சிக்கும் நேர்மையாக நீ நடந்தால் அச்சம் என்பது ஏன்? ஒரு உண்மையை உயிருக்குள் எழுது;

“ பாதையில் கிடக்கும் சாணங்களால் உன் பயணங்கள் அழகாகி விடுவதில்லை”

அப்படியானால் அடுத்தவர் என்னைப் பற்றி இல்லாதவை பொல்லாதவை பேசும் போது எப்படி அதைக் கடந்துபோவது? அது உனக்குரியதில்லை என்று உதறிவிடு. காலில் சேறுபட்டால் அதை உன் அலமாரிக்குள் கவனமாய் சேர்த்து வைப்பதில்லையே. அழுக்கை அசிங்கத்தை ஓங்கி இரண்டு தட்டுத்தட்டி வீட்டுக்கு வெளியே உதறிவிட்டு உள்ளே போவாயே! அப்படிச் செய். சிலரது வார்த்தைகளைக் கணக்கிலெடுக்காது கடந்துபோ. அழுகல் சேறு மணக்கும் சாக்கடைகளைக் கடந்துபோகையில், மூக்கைப் பொத்திக்கொண்டு போவது போல துட்டரைக் கண்டால் தூர விலகுவது நல்லது தானே! ஏன் தெரியுமா? முள்ளிலே சேலை விழுந்தாலும் சேலையில் முள் விழுந்தாலும் கிழிவது சேலைதானே.

இப்பூமியில் எல்லாமே தவறாக நடக்கிறது. எல்லா மனிதர்களுமே

**அருட்பணி எஸ்.அஜந்தன்**

மோசமானவர்கள் என்று எதை எடுத்தாலும், எதைச் செய்தாலும் அதிலே குறைபிடிக்கிற மனிதர்களின் மனசுகளை கிளறிப்பார்ப்போம் வாருங்கள்...

கந்தப்பு வைத்தியரிடம் போனான். உடம்பு முழுவதும் அப்படி ஒரு வலி. வைத்தியர் கேட்டார் என்ன வருத்தம்? கந்தப்பு; “ஐயோ! டொக்டர் என்ர உடம்பு முழுக்க அப்பிடி நோகுது. குத்தி வலிக்குது” வைத்தியர் ; “எதைத் தொட்டாலும் நோகுதா?”

கந்தப்பு; தன் விரலால் ஒவ்வொரு பாகமாய் தொட்டுக் காட்டினார். தலை-யைத் தொட்டார். ஐயோ! வலிக்குது என்று கதறினார். முகத்தை, நெஞ்சை, வயிற்றை, கையைக் காலை எல்லா வற்றையும் தொட்டுத்தொட்டுக் காட்டி வலியில் துடித்தழுதார்.

வைத்தியருக்கு எதுவுமே புரியவில்லை. இப்படி ஒரு வியாதியா? தான் படித்த அத்தனை அறிவையும் திரட்டி யோசித்தார். கந்தப்புவை வெளியில் இருக்கச் சொன்னார். தன் சுழல் கதிரையில் நான்கு முறை வலதும் இடதுமாகச் சுழன்றார். மூளையில் பொறிதட்டியது .கந்தப்புவை அழைத்தார். தலையில் இருந்து கால்வரை தானே தொட்டுப் பார்த்தார். நோகிறதா என்று கேட்டார். “இல்லையே” என்று விழி பிதுங்கினார் கந்தப்பு.

நீ தொட்ட விரலை நீட்டு என்றார் வைத்தியர். பார்த்தவர் பதறிப்போனார். உடல் முழுவதையும் தொட்டுக்காட்டிய அந்தச் சுட்டுவிரல் காயம் பட்டுக் கண்டலடைந்து, சிதழ்கட்டி புழுப்பிடித்துக் கிடந்தது.

குணமாக்க வேண்டியது உடல் முழுவதையுமல்ல. சிதழ்கட்டிப் புழுப் பிடித்துக் கிடக்கிற விரலைத்தான் என்ற தெளிவு எவ்வளவு மகத்துவமானது.

குறைகளை மட்டுமே பார்த்து அலைகிற மனிதர்கள் இந்த சீழ்பிடித்த மனசுகளோடு திரிகிறார்கள். குறைகளோ தவறுகளோ இல்லாத மனிதர்கள் இன்னும் பூமியில் பிறக்கவேயில்லை. தவறுகள் வந்து விடுமோ என்ற அச்சத்தில், யாராவது ஏதாவது பேசுவார்களோ என்ற தயக்கத்தில் வாழ்க்கைக்குள் காலடி எடுத்து வைக்கத் தவறிவிடாதீர்கள். தவறுகளிலிருந்து நிறையவே கற்றுக்கொள்ளலாம்.

குறைகூறித் திரியும் சாக்கடை மனிதர்களைக் கணக்கிலெடுக்காதீர்கள். நீங்களும் ஒருபோதும் அடுத்தவரின் பெயரைக் கெடுக்கும் நாற்றம் நிறைந்த சாக்கடைகளாக மாறிப்போகாதீர்கள். குயிலைப்பார்த்து மனிதன் சொன்னான்;

**நீ மட்டும் கறுப்பாய் இல்லையென்றால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்...**

கடலைப் பார்த்துச் சொன்னான்;

**உப்பு மட்டும் உன்னில் இல்லையென்றால் உன் மதிப்பேவேறு...**

ரோஜாவைப் பார்த்துச் சொன்னான்;

**முட்கள் மட்டும் உன்னில் இல்லையென்றால் நீ எவ்வளவு அழகாய் இருந்திருப்பாய்....**

இவை மூன்றும் சேர்ந்து மனிதனிடம் சொல்லின;

**“குறைகளை மட்டுமே பார்க்கும் குணம் மட்டும் உன்னில் இல்லையென்றால் உன் மதிப்பே வேறு”**

# வழிபாடு வாழ்வாகுமா!!

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

**வழிபாட்டில் திரு இசை**

இவை அனைத்தும் திருச்சபையைக் கட்டியெழுப்பும் வகையில் நடைபெற வேண்டும்' 1கொரி: 14:26. இந்த வார்த்தைகள் திருஅவையில் இருந்த சில வழிமுறைகளை இனங்காட்டுகின்றது. சிலர் திருப்பாடல்களையும் இசைத்துள்ளனர். இது திருஅவையில் காணப்படும் ஓர் அழகான பாரம்பரியமாகும். 'ஆமென்', 'அல்லேலூயா' என்று பதிலுரைக்கும்போது இப்படியான வார்த்தைகள் ஒரு பாடலுக்குரிய பதிலாகவும் அல்லது இராகத்தோடு வாசிக்கும் போது சொல்லப்பட்ட பதிலாகவும் அமைந்திருக்கலாம். மூன்றாம் நூற்றாண்டில் திருச்சபையை ஏற்றுக்கொண்டதன் பின்னர், இந்தத் திருப்பாடல்களைத் திருப்பலியில் வாசிப்பதை நிறுத்திவிட்டு அவற்றை இராகங்களோடு பாடுவதை ஆரம்பித்தனர். இது நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளிலே காணக்கூடியதாக உள்ளது. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட ஒரு அழகான திருவழிபாட்டுப் பாரம்பரியமாக 150 திருப்படல்களையும், திருப்புகழ்மாலை (Divine Office) எனும் வழிபாட்டு முறையினூடாகப் பாடவும் அதை நாளும் பயன்படுத்தவும் தொடங்கினர். இந்த நடைமுறை சில துறவிகளின் வழிகாட்டலிலும், அவர்களின் ஊக்கத்திலுமே புதிய படைப்பாக மாறியது. இவ்வாறு 6ம் நூற்றாண்டில் பாப்பரசர் 1ம் கிரகோரி திருவழிபாட்டில் வாசகர் திருப்பாடல்களை இராகத்தோடு வாசிப்பதை வலியுறுத்தினார். 7ம் நூற்றாண்டில் குருக்களைக் கொண்ட ஒரு குழுவினர் பாப்பரசரின் வழிபாடுகளிலே பாடுவதற்காக நியமிக்கப்பட்டனர். அவர்களே பாடல் திருப்பலியையும் அத்திருப்பலிக்குரிய அனைத்துப் பாடல்களையும் உருவாக்கினர். 8ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த 1ம் உரோமை வழிகாட்டி நூல் (Ordo Romanus I [c.700]) இதற்கான ஆதாரத்தைக் காட்டி நிற்கின்றது.

இவ்வாறு வரலாற்றிலே இரண்டு வகையான திருப்பலி முறைகள் காணப்பட்டன: முதலாவது, பாடல்களற்ற திருப்பலி (Low Mass, in Latin, Missa Lecta) இரண்டாவதாகப் பாடல் திருப்பலி (High or Solemn Mass, in Latin Missa cantata). திரெந்து சங்கம் இந்தப் பாடல்களற்ற திருப்பலியை வரவேற்று அதை எல்லா இடங்களிலும் நடைமுறைப்படுத்தியது. ஆனால் இந்த முயற்சி தொடர்ந்தும் கைகூடவில்லை. 16ம் நூற்றாண்டில் இந்தப் பாடல்களற்ற திருப்பலி அல்லது குரு தனியே ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் (Private Mass) இறை மக்களின் பங்களிப்பை அதிகம் எதிர்பார்த்தனர். இதனால் அவர்களுக்கு அத்திருப்பலியிலே செபிக்கும் ஒரு பழக்கத்தை கொண்டு வருவதற்காக செபமாலைசொல்லக்கற்றுக் கொடுத்தனர். திருப்பலியில் குரு மட்டும் செபிப்பது அல்ல மாறாக மக்களும் சேர்ந்து செபிக்கவும் உணர்த்தப்பட்டது. இவ்வாறு இந்த பாடல்களற்ற திருப்பலி மெதுவாக வளர்ச்சிபெற்று, அவை இராகத்தோடு பாடவும், மக்களும் பாடகர் குழாமும் சேர்ந்து அதற்குப் பதிலளிக்கவும், பாடவும் வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதனால் திருஇசைக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்தத் திருஇசையிலே அதிகமான பாடல்கள் பாடப்படும் போது, வழிபாட்டின் தூய்மை அதிகம் அர்த்தம் பெறுகின்றது.



13

அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தாலி நாட்டில் இலத்தின் மொழியைப் பயன்படுத்திப் பாடல்களை இயற்றி அவற்றைத் திருவழிபாட்டிற்கு வெளியே தமது சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்த ஆரம்பித்த காலத்தில், பாப்பரசர் 10ம் பத்திநாதர் (Giuseppe Melchiorre Sarto) ஆயராக இருந்த காலத்தில் சில செயற்பாடுகளைமேற்கொண்டார். இவர்திருவழிபாட்டின் மேல் அதீத ஆர்வம் கொண்டிருந்ததால் திருஇசையைக் குருமட மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். பாப்பரசராக நியமிக்கப்பட 10 வருடங்களுக்கு முன்பே இந்தத்திருஇசைபற்றியவிளக்கத்தைஎழுதினார். ஆலயங்களில் பயன்படுத்தப்பட்ட 'மிகைப்படுத்தப்பட்ட இசை' (Band music) முறையை இல்லாமல் செய்தார். 1903ம் அண்டு கார்த்திகை மாதம் 22ம் திகதி 'Tra Le Sollecitudini' எனும் 'திரு இசை பற்றிய விளக்கம்' திருஇசை பற்றிய முதலாவது (Mottu Proprio) மடல் ஆகும். இது அழகானதும் ஆழமானதுமான திருஇசை பற்றிய இறையியலை எமக்குச் சொல்லித் தருகின்றன.

சொற்கள், குரல், இசை இவை மூன்றையும் ஒன்றிணைக்கும்போது தான் ஒரு புதிய படைப்பு உருவாகுகின்றது. இதனடிப்படையில் சில முக்கிய விடயங்களைக் குறித்துக்காட்ட விளைகின்றேன். பாடுவது என்பது செபிப்பதற்கு இட்டுச் செல்ல வேண்டும். *(தொடரும்...)*

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது...

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

**உறுதிகொண்ட உணர்வலைகள் பேசுகின்றன**

இவ்வாறு நடைபெறாது என்றே நம்புகின்றேன். இறைவனின் நற்பணிகளுக்குத் தோழனாகிய நீர் அவற்றில் அனுதாபமில்லாதவர்களிடமிருந்து அவற்றைக் காப்பாற்றும் நிறைந்த ஞானமும், நிதானமும் உள்ளவராய் இருந்து குருக்களிடையே தோன்றும் போட்டிமனப்பான்மை, மற்றோரை ஆட்சிசெய்யும் எண்ணம் என்பவற்றில் பாராமுகமாய் இல்லாமல் முற்றுப் புள்ளியிட வேண்டும்.

பியன்வெனுவின் உள்ளத்தின் உண்மையான உணர்வுகளும், நேர்மையான வாழ்வும் வீண்போகாதவாறு ஆயருக்கு எழுதிய கடிதம் துணைபுரிந்தது. ஆயருக்கு ஏற்பட்ட தப்பெண்ணம் கரைந்தோடியது. உண்மையான இறைஊழியன் பியன்வெனு என்ற அன்புணர்வு மேலோங்கியதுடன் பியன்வெனுவின் பணிகளுக்குத் துணைபுரிவதாகவும் உறுதியளித்தார்.

**அர்ப்பணப் பூ**

நிறுவுனர் பற்றிய வரலாறுகள் கூறுவதுபோல் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவராய், இறைவழியை ஏனையோருக்குக் கற்பிப்பதற்குமுன் தாமே அதை வாழ்ந்து காட்டினார். சுல்பீஷியன் சூழலில் தன்னை நன்முறையில் தயாரித்துக் குருத்துவத்தைப் பெற்றுக்கொண்டார். குருத்துவத்தினால் அழியாத முத்திரையிடப் பட்டிருந்தார். இவர் பேச்சில் அல்லாமல் செயலிலும் உண்மையிலும் தனது ஆவல்களுக்கு மிக உறுதியான ஒரு அடித்தளத்தைக் கொடுக்கத் தேடிய மனிதனாவார்.

**அழைப்பின் அருள்**

துறவறம் என்னும் கலைச்சொல்லை நிறுவுநர் வெகு அபூர்வமாகவே பயன்படுத்தினார் என்பதை அழுத்திக் கூறலாம். 19ம் நூற்றாண்டு இறையியலுக்கேற்ப "உலகத்தை விட்டு ஓடுதல்" என்னும் கருத்தில் அழைப்பின் அருள் பற்றிப் பேசினார். தூய யோவான் விளக்குவதுபோல் "உலகத்தை இருள், சுயநலம் என விளங்கிக்கொள்வோமானால், இந்தக் கலைச்சொல்லை நாம் உபயோகிப்பதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால் தந்தை நோஆய் துறவற வாழ்வை 'இறைவனுக்கு அர்ப்பணமாக்கும் உதாரகுணமுள்ள பலி' என்கின்றார்.

ஒருவன் வாக்குத்தத்தம் செய்தும், செய்யாமல்விடுத்தும் இவ்வர்ப்பண வாழ்வை வாழலாம். இந்த அர்ப்பண வாழ்வை வாழ மூன்று அம்சங்களை மனதில் கொள்ளலாம்.

- ஒருவன் தன் சொந்த அழைப்புக்குப் பிரமாணிக்கமாயிருத்தல்.
- அதில் நிலை கொள்ளுதல்
- அத்துடன் நற்செய்திச் சுதந்திரத்தை வாழ்தல்

வாக்குத்தத்தங்களால் தங்களை அர்ப்பணித்தவர்கள் (ஏழ்மை, கீழ்ப்படிவு, விரதத்துவம்) மலைப்பொழிவின் ஏழ்மையையும், இதயத்தூய்மையையும் அடைவதற்கான வழிகளையும் நிறைவாழ்வை அடைவதற்கான வழிகளையும் புனிதத்துவம் - முழுமையான அன்பு என்பவற்றின் அடிப்படையில் வாழவேண்டும் என்கின்றார்.

**அர்ப்பனத்தின் நோக்கம்:**

நாம் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். நம் வாழ்வு முழுவதும் அவருக்கே சொந்தமானது. இந்த உலகின் பணம், பதவி, புகழ், பெருமை எல்லாமே வீண். இறைவன் ஒருவரே வாழ்வின் முழுமை, நிறைவு என்ற விசுவாசத்தில் அவரின் அரசிற்காக உழைக்க நம்மை முழுச் சுதந்திரத்துடன் அர்ப்பணிப்பதாகும்.

படைப்பனைத்தும் என்ன நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கப்பால் எதுவும் இளைப்பாற்றியையோ, அமைதியையோ அடைவது அசாத்தியமாகும். அந்த அடிப்படையில் அர்ப்பணம் என்பது இறைசித்தம் நிறைவேற்ற முழுச்சுதந்திரத்துடனும், மன மகிழ்வுடனும் எம்மை முழுமையாகக் கையளித்தலும் இதற்காக அனுப்பப்படுதலுமாகும்.

அர்ப்பணம் பற்றி நல்லபிதாவின் செபம் இயேசுவே! நான் உம்மை நேசிக்காமல் இருப்பது எப்படி? எனது இதயத்தை நீரே எடுத்துக்கொள்ளும். ஏனெனில் அது உமக்குத் தேவை. அதை நான் உமக்குத் தருகின்றேன். அதை நீர் எடுத்துக் கொண்டு, அதன்மூலம் உமக்கு விருப்பமானதைச் செய்யும் உமது அன்பின் அக்கினியால் அது சுடர்விட்டு எரியச்செய்யும். அது எரிந்துகொண்டே இருக்கட்டும். இனிமேல் அதன் மூச்சுக்கள் உமக்காக மாத்திரமே இருக்கட்டும். எனது தந்தையாக, தாயாக எனது நண்பனாக, எனது எல்லாமுமாகஇருப்பீராக. மற்றஎல்லாவற்றையும் நான் விட்டுவிடுகின்றேன். நீர் மாத்திரம் எனக்குத் தேவை. ஓ! எனது இனிய அன்பரே இன்பத்திலும், துன்பத்திலும், வாழ்விலும், மரணத்திலும் நான் உம்மைப் பற்றி மாத்திரமே சிந்திப்பேன். இனிமேல் உமது அன்பைத் தவிர வேறெதையும் தேடிச் செல்லமாட்டேன். எனது மகிழ்ச்சி யாவும், நான் செய்யும் அலுவல்கள் அனைத்தும் நீர் எனக்குக் காட்டிய அன்பு. எனது விருதுவாக்கியமாக நான் தெரிந்து கொண்ட "இயேசுவை அன்பு செய்வதென்றால் என்னவென்று விளங்கிக் கொள்பவன் பேறுபெற்றவன்" என்ற வார்த்தைகளைத் தியானிப்பதிலேயே அடங்கியிருப்பதாக.

அருட்சகோதரி லூமினா போல்ராஜா
திருக்குடும்பக் கன்னியர் சபை

**பரமனின் பாதமலர்களில்**

திருக்குடும்ப சபையின் வரலாற்றுக் கதாநாயகன், சபையின் நிறுவுனர், நலல பிதா என்று பாசமாக எல்லோராலும் அழைக்கப்பட்டார். நன்மை செய்வ தற்கே தன்னை அர்ப்பணித்த நல்ல இதயம் கொண்ட பியன்வெனு நோஆய் கருணையும், சாந்தமும், உறுதியும் கொண்ட புரட்சியின் வீரன். தூயஆவியின் இயக்காற்றலாலும், இறைவார்த்தையைத் தியானித்து வாழ்வாக்குவதாலும், நற்கருணைப் பிரசன்னத்தில் இருக்கும் இயேசுவின் உடன் இருப்பாலும் இறைபணியாற்றி எங்கும், எவருக்கும், எப்பொழுதும் நன்மை செய்து கொண்டே சென்றார்.

வாழ்க்கையின் ஓட்டத்திலே 1829ம் ஆண்டு தொடக்கம் 1861ம் ஆண்டு வரை பல்வேறு நோய்களினால் வேதனைப் பட்டு மரணத்தோடு போராடினார். "வாழ்ந்தாலும், இறந்தாலும் ஆண்டவருக்கு என்றே வாழ்கின்றோம்" என்ற இறைவார்த்தைக் கேற்ப வாழ்வின் இறுதிவரை கிறிஸ்துவின் பாடுகளைத் தம் உடலில் தாங்கியவராகப் பயணித்தார். "இறைவன் மாத்திரமே ,அவருக்கே மகிமை" என்ற ஆன்மீக வாஞ்சையுடனும், தளராத மன உறுதியுடனும் முன்னேறிச் சென்று விசுவாசத்துக்கு வாழ்வாலும் வார்த்தையாலும், அன்புப்பணிகளாலும் சான்று பகர்ந்தார். எல்லோரும், எல்லாமும் இறைதந்தையின் உறவில் முடிவில்லா அன்பில் இணைந்து ஒரே குடும்பமாக விளங்கப் பாரிய குடும்பமாகிய திருக்குடும்ப சபை என்றும் சுடரை ஏற்றிய விளக்கு 1861ம் ஆண்டு மாசித் திங்கள் 08ம் நாள் விண்ணகக் குடும்பத்தோடு இணைந்து இறைபுகழ்பாட அணையா விளக்காகினார். *(தொடரும்...)*

# பொருட்செல்வத்தைத் தேடி அருட்செல்வத்தை இழப்பதா?

அருட்பணி.மா.றேஜிஸ் இராசநாயகம்

**முகவுரை**

பொருளாதாரத்தை முதன்மைப் படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள நுகர்வுக் கலாசாரத்தினால் இன்று பல் தேசிய நிறுவனங்களின் ஆதிக்கம் உலகத்தை ஒரு சந்தையாக மாற்றி விட்டது. இச் சந்தை மனிதனையே இலக் காகக் கொண்டதினால் அவன் அதில் சிக்குண்டு நுகர்வுக்குத் தேவையான பொருளீட்டுவதிலேயே இரவு பகலாகத் தன் முழுக்கவனத்தையும் செலுத்தித்தன் மகிழ்ச்சியை இழந்து விடுகின்றான்.

**மனிதன் பொருளுக்குச் சமமானவனா?**

இன்றைய நுகர்வுக் கலாசாரத் தில் மனிதனின் மாண்பு, மகத்துவம் என்பன மழுங்கடிக்கப்பட்டு மனிதன் ஒரு பொருளாகக் கருதப்படுகிறான். இன்று அரசோ ஏனைய நிறுவனங்களோ பொருளைப் பயன்படுத்துவதுபோலவே மனிதனைப் பயன்படுத்துகின்றன. எவ்வளவுக்கு ஒரு மனிதனைப் பயன் படுத்தமுடியுமோ அவ்வளவுக்கு அவனைப் பயன்படுத்திவிட்டு அதன்பின்னர் அவனை ஒரு வேண்டாப் பொருளாக வெளியேற்றிவிடுகின்றன. இன்று வயோதிபர் இல்லங்களில் உள்ளவர் களோடு உரையாடினால் இவ்வுண்மை நன்கு புலப்படும்.

**இரு பரிமாணங்கள்:**

அனைத்து முன்னேற்றங்களும் இரு பரிமாணங்கள் கொண்டவை. மனி தன் மனிதனாக வாழ்வதற்கு பொருள் பயனுள்ளதென்றால் அது அவசியமா னது. பொருள்தான் எல்லாம் அதுவே 'தெய்வம்' என்று எண்ணினால் அது அவனது தொலை நோக்கைத் தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும். இதன் விளைவாக மனங்கள் மரத்து, இதயங்கள் இறுகி அவன் தன் உறவுகளையும், நண்பர் களையுமே தேடாதுவிடுகிறான். அப்படித் தேடினாலும் சுயதேவைக்கே தேடி அதன் விபரீத விளைவுகளைச் சந்திக்கிறான்.

**மனித முன்னேற்றம்:**

"பேராசையோடு சொத்தைத் தேடுதல் தனிமனிதனின் தன்னிறை வுக்கும், மனித மாண்புக்கும் பெருந்த டையாக அமையும். "பேராசைதான் அறநெறி வளர்ச்சியின்மையின் தெளி-வான காரணி" என்கிறது 'மனித முன் னேற்றம்' என்னும் கத்தோலிக்க திரு அவையின் திருத்தந்தை 6ம் பவுலின் சுற்றுமடல். செல்வம் என்னும் சொல்லே அது சென்றுவிடும் அல்லது நிலையற்றது என்பதைச் சுட்டி நிற்கிறது.

**அறிவற்ற செல்வன்:**

நாம் சேர்த்துவைக்கும் பொருட் கள் அனைத்தையும் ஒருநாள் இழக்க வேண்டும். இதை விளக்க விவிலியத்தில் ஒரு கதை கூறப்படுகிறது. 'செல்வன் ஒருவனின் நிலம் நன்றாக விளைந்தது. அவன் "நான் என்ன செய்வேன்? என் விளைபொருட்களைச் சேர்த்துவைக்க இடமில்லையே! என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாக்கி என் தானியத்தையும் பொருட்களையும் சேர்த்துவைப்பேன். பின்பு, என் நெஞ்சமே, உனக்குப் பல் லாண்டுகளுக்கு வேண்டிய பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. நீ உண்டு, குடித்து மகிழ்ந்திரு என்று சொல்வேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால், அன்றிரவு கனவில் அவனுக்கு ஒரு குரல் கேட்டது. "அறிவிலியே, இன்றி ரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" ' பலருடைய வாழ்வில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் இடம் பெறுவதை நாம் பார்த்த பின்பும் இவை எமக்குச் சுடலை ஞானமாகவே நின்று விடுகிறது. அதாவது அந்தக் கணத்துடன் நின்றுவிடுகிறது.

**இறுதி வார்த்தைகள்:**

இறக்கும் ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்: "உலக வர்த்தகத்தின் உச்ச நிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக் கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை அற்ப மகிழ்ச்சி. மரணம் என்னை அணமித்தபோது, நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன். பெருமை யென நான் நினைத்த என் பெயரும் பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின. பணத்தைமட்டுமே வாழ் வில் குவித்த அதேவேளை வேறு முக்கியமானவைகளைக் கைநெகிழ்ந்து விட்டேன் என்பதை உணருகிறேன். உறவுகளையும், வாழ்வின் ஏனைய விழுமியங்களையும் நான் தேடியிருக்க வேண்டும்". சொத்துக்களின் தொடர் தேடல் ஒருவரின் தொலைநோக்கையே தொலைத்துவிடும். ஆழமாக அன்பு செய்யும் இதயத்தை இறைவன் தந்தார். ஏன்? என் வாழ்வின் இறுதியில் என்னுடன் கூட வருவது என் அன்புச் செயல்களைத் தவிர வேறு எவை? "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?" இவர் யாரோ?

இழந்தவற்றில் எதையும் மீளப்பெற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்வை?... காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும். "உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்." இறப்பின்போது இந்த இறுதி வார்த்தை களை உதிர்த்த உதடுகள் யாருடை யவை என்று வியக்கிறீர்களா? இவர் ஒரு மறைபோதகரோ மெய்யியலாளரோ அல்லது ஆன்மீகவாதியோ அல்ல. மசிந் ரொஷ் கணனி, அப்பிள் கணனி, ஐ போன், ஐ பாட், ஐ பொட் என்பவற்றைக் கண்டு பிடித்த கோடீஸ்வரர் ஸ்ரீவ் ஜொப்ஸ். இவரது வார்த்தைகள் வாசகர் உள்ளங் களை ஊடறுத்துச் செல்லுகின்றன அல்லவா? அன்பை அடித்தளமாகக் கொண்ட ஆன்மீகம் இல்லாமல் வெறும் உலக செல்வம் எம்மைப் பின்தொடருமோ?



இவற்றையே கத்தோலிக்க திரு அவையின் இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறும்போது:

**"வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவருமே. இறை-வனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்"**

என்றார். இவற்றைத் தேடினால் நாம் கண்களை மூடும்போது கடவுள்முன் வெறுங்கையராக நிற்கமாட்டோம்.

"அறன் ஈனும் இன்பமும்
ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

என்றார் பொய்யா மொழிப்புலவர்.

அதாவது தீதின்றித் தேடுகின்ற பொருள் நமக்குப் புண்ணியத்தையும் இன்பத்தையும் தருகிறது. மனத் தூய்மையோடு வாழ்வுக்குத் தேடவேண்டியவற்றைத் தேடும்போது உள்ளம் உயரும், வாழ்வும் உயரும். அன்றேல் நுகர்வுக் கலாசாரத்துள் மூழ்கி மடியவேண்டி ஏற்படும்.

மனித மாண்பு மிக்கவர்களாய் வாழ நாம் எதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்?

- ❑ எமது ஆன்மீகக் கொள்கைகளில் தெளிவான உறுதிப்பாடுவேண்டும்.
- ❑ நாம் மனித மாண்பை மதிக்க வேண்டும். எமது உடல், அறிவு, ஆன்மா என்பவை புனிதமானவை என்பதை உணர்ந்து அவற்றை நன்கு பேணிப் பாதுகாக்கவேண்டும். அதுபோன்று மற்றவர்களையும் மாண்போடு நடத்தவேண்டும்.
- ❑ இந்த நுகர்வுக் கலாசாரத்தால் நாம் தொலைத்துவிட்ட கொடைகள், ஆசீர் வாதங்களை மீளக் கண்டு பிடிக்கவேண டும். குறிப்பாக குடும்ப உறவுகளை நன்கு பேணவேண்டும். உறவுகளை உறவுகளாக மதித்து வாழவேண்டும்.

சமூக, சகோதர உதவிகளில் குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்டோ ரின் நல்வாழ்வின் உயர்ச்சிக்காகத் தன்னல மற்ற சேவைகளில் ஈடுபட வேண்டும். தன்னலமற்ற சேவைக்கு எமக்கு எத்த னையோ எடுகோள்கள் வரலாற்றில் உண்டு. "ஒன்றின் தொடக்கமல்ல, அதன் முடிவே கவனிக்கத்தக்கது" என்று விவிலியம் கூறுகிறது. அதாவது, ஒரு மனிதனின் பிறப்பு அல்ல, அவனது வாழ்வும் அதன் நிறைவுமே முக்கியமானவை.

# என் சீனத்து நண்பனுக்கோர் மடல்....

**என் சீனத்து நண்பனே!**
என்ன பிழை செய்தோம்
நாம் - உம்
பொருட்களில்
நட்புக் கொண்டதை விட
என்ன பிழை செய்தோம்...

கண்ணுக்குத் தெரியாத - ஒரு
கிருமியை
எதற்காய்
எம்
மண்ணுக்கு அனுப்பினாய்..

மகிழ்ச்சியாய் வாழ்ந்த - இந்த
மானிடத்தில்
எதற்காய்
மரணத்தை
அனுப்பினாய்...

ஆயிரம் சாவுகளை
அண்மையில் கண்ட
எமக்காய்
எதற்காய்
அவலத்தை அனுப்பினாய்...

வடகொரியாவிற்கு
மீனையும்
ஐரோப்பாவிற்கு வாலையும்
எதற்காய்
பாசத்துடன் காட்டினாய்...

நீ அமெரிக்காவை
ஆழ நினைத்திருந்தால்...

பொருளாதார உச்சியில்
கொடிகட்ட
நினைத்திருந்தால்....

முதலீடுகளில்
கோபுரங்களில்
முதலாளியாக
நினைத்திருந்தால்...

நெஞ்சோடு நெஞ்சுமோதி
வாயோடு வாய் மோதி
வாளோடு வாள் மோதி
உன் வீரத்தை
நிரூபித்திருப்பாய்...

கிருமியை - நீ
கருவியாக்கி - உன்
பெறுமதியை நீயே
குறைத்துவிட்டாய்....

நீ பாம்பால் உருவாக்கிய
பாவம்
இந்தப் பாரினில்
நஞ்சைக்கக்கினாலும்...

நாம்
மீண்டு வருவோம்
மீண்டும் வருவோம்...

சாம்பலில் இருந்து
எழும்
பீனிக்ஸ் பறவைகளாய்
நாம் மீளவும் எழுவோம்...

எமக்கு
முகமூடிகளைத்
தந்த - உன்
முகத்திரை கிழியும் நாள்
வெகுதொலைவிலில்லை...

ஐ.நாவின் மேசையில்
உன் பக்கங்கள்
அழிந்து போகும்
நாள்
வெகு தொலைவிலில்லை...

நான்
கனவிலும்
நினைக்கவில்லை...
நஞ்சுகொண்டு - நீ
உலகத்தை
நாட்கணக்கில்
அழிப்பாயென்று....

நான்
கற்பனையிலும்
நினைக்கவில்லை
வைரஸ் கொண்டு - நீ
எம் வையகத்தை
வாட்டி
எடுப்பாயென்று....

மனச்சாட்சியைத்
தொட்டுப்பார்
உன்
மண்ணைத் தோண்டிப்பார்
எம்
அண்ணன்
போதிதர்மன்
அங்குதான்
உறங்குகிறான்...

உன்னை மன்னிக்க
பாப்பரசரும்
தயார்...
பார்
அரசர்களும்
தயார்...

முடிந்தால்
நிறுத்தி விடு - உன்
இரசாயன
யுத்தத்தை

முடிந்தால்
முற்றுப்புள்ளியிடு - உன்
கொறோனாவின்
கோரமுகத்தை

அப்போது கிடைக்கும்
இதமான முத்தம்
இறைவனிடமிருந்து
அப்போது கிடைக்கும்
நோபல் பரிசு
சமாதானத்திற்காய்
உனக்கு அன்று...

உன்னால் இறந்த
உயிர்களின் நினைவுடன்
என்றும்
உன் நண்பன்
மதுரமகன்

ஜொனி மதுரநாயகம்


# தேவை ஒரு கிரியா ஊக்கி...

## 2020 பொதுத்தேர்தல் மட்டிலான தமிழ் மக்கள் நோக்கு நிலையிலிருந்து ஒரு குறிப்பு

2020ம் ஆண்டுக்கான பாராளுமன்ற தேர்தல் முடிவுக்கு வந்திருக்கிறது. 1977க்கு பின்னான உறுதியான பாராளுமன்றம் ஒன்று ஆட்சியில் அமர்கிறது. உறுதியான ஆட்சி அமைவது சில விடயங்களில் நன்மை பயக்குமெனினும் அது எதேச்சாதிகாரத்தை நோக்கி நாடு செல்லவும் காரணமாகி விடும்.

1977இல் அமைந்த ஆட்சி தமிழ் மக்களுக்கு வழங்கியது அவர்களது பங்களிப்பு ஏதுமற்ற பங்களிப்பை எதிர்பார்க்காத ஒரு அரசியல் அமைப்பையும் 1983இல் கட்டவிழ்க்கப்பட்ட இன வன்முறையும் தான். 'ஆணைப் பெண்ணாக மாற்றுவதை தவிர' அனைத்து அதிகாரங்களையும் கொண்ட ஒரு ஜனாதிபதி ஆட்சி முறையை இது இலங்கைக்கு அறிமுகம் செய்தது. "தமிழர்களை ஒடுக்கினால் சிங்களவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். ஆகவே நான் தமிழ் மக்களைப்பற்றி கவலைப் படப்போவதில்லை" என்று குறிபிட்ட ஒரு ஜனாதிபதியின் கீழ் தமிழர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அதனைவிட எதேச்சாதிகாரமான இராணுவ மயப்பட்ட ஆட்சி வளையத்தினுள் இன்று தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அப்போது 18 ஆசனங்களை கைப்பற்றி எதிர்கட்சி தலைவர் பதவியை பெற்றுக் கொண்ட பலமான நிலையிலேயே தமிழ் தரப்பு களமிறங்கியது. இருந்த போதிலும் அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஆனால் இப்போதோ சிதைந்து சின்னாபின்னமான தரப்பாக தமிழ் தரப்பு பாராளுமன்றம் புகுகிறது. வடக்கில் ஒரு புறம் ஒரு லட்சம் வரையான வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களைக் கைபற்றிய கட்சிகளாக அரச தரப்பு / ஆதரவுக் கட்சிகள் பாராளுமன்றம் செல்கின்றன. கடும் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டோடு ஐம்பது ஆறாயிரம் வரையான வாக்குகள் பெற்று இரண்டு ஆசனங்களோடு இன்னுமொரு தரப்பு செல்கின்றது. மிகுந்த உட்பூசல்களோடும் பதினாறிலிருந்து பத்தாக சுருங்கி விட்ட ஆசனங்களோடும் மற்றுமொரு தரப்பு செல்கிறது. புதிய வரவான தரப்பு மிதமான தமிழ்த்தேசிய நிலைப்பாட்டோடு ஒரு ஆசனத்துடன் செல்கிறது.

ஆனால் சவால்களோ நிறைந்து




**அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்**

கிடக்கின்றன.

- அன்றாட பிரச்சினைகள்
- அபிவிருத்தி தேவைகள்
- அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு
- குடியேற்றம்
- வேலைவாய்ப்பு
- இராணுவமயமாக்கல்
- அரசியல் கைதிகள்
- காணாமல் போனோர் விடயங்கள்
- பொறுப்புக்கூறல்
- ...

இவ்வாறு எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் எண்ணிறந் தவையாக இருக்கின்றன. ஒரு பொதுவேலைத்திட்டத்தில் இத்தலைமைகள் இணையுமா என்பது கேள்விக்குறியே. இந்நிலையில் தமிழ் தரப்புக்களிடையே ஊடாடி ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் அவற்றை இணைக்க தமிழ் சிவில் தரப்புக்கள் முன்வருமா என்பதே இன்று எம்முன் எழும் வினாவாகும்.

கடந்த காலங்களில் கத்தோலிக்க திரு அவை ஒரு கிரியா ஊக்கியாக செயற்பட்டுள்ளது. இப்போதைய இந்த அவசர அவசிய தேவையை நிறைவேற்ற அது முன் வருமா?

---

# கண்ணீர் விட்டே வளர்த்தோம் கருகத் திருவுளமோ...?


2020 ஆம் ஆண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தல் நிறைவடைந்துள்ளது. 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை வரலாற்றில் தனியொரு கட்சி பெரும்பான்மை வாக்குகளுடன் ஆட்சி அமைக்கின்றது. அதேவேளை ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இலங்கையின் அரசியற்கட்சி வரலாற்றில் புதிய கட்சிகளாக தம்மைப் பதிவு செய்துகொண்ட கட்சிகளாகும்.

காலாதிகாலமாக ஆண்டு வந்த ஜனநாயகத்திலே புரையோடியும், புண்பட்டும் போயிருந்த பழமையான அரசியல் கட்சிகளுக்கெல்லாம் கையசைத்து விடைகொடுத்துவிட்டு புதிய கட்சிகளை ஆட்சிப்பீடத்தில் இலங்கை மக்கள் அமர வைத்துள்ளனர்.

இலங்கை மக்களின் தீர்க்கதரிசனமான ஜனநாயகப் பார்வையும், அரசியல் முதிர்ச்சியும் இத்தகைய புதிய கட்சியொன்று அரசாங்கம் அமைப்பதற்கும், மற்றுமொரு புதிய கட்சி எதிர்க்கட்சியில் அமர்வதற்கும் வழிகோலியுள்ளது என்றே கூறவேண்டும்.

இலங்கை மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? அல்லது நிறைவேற்றப்படுமா? ஆசியாவின் அதிசயமாக இலங்கை மாறுமா? என்பதைச் சற்றுப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். மொட்டுக் கூம்பிவிடாது மொட்டாகவே நின்று நறுமணம் கமழ வேண்டும் என்பதே தாய் நாட்டை நேசிக்கும் அனைவரினதும் தார்மீக வேண்டுகோளாகும்.

இது ஒருபுறமிருக்க, தமிழர் தரப்பில் களமிறங்கிய பல கட்சிகளுக்கும் அதன் தலைமைத்துவங்களுக்கும் தமிழ் மக்கள் இம்முறை பச்சைக்கொடி காட்டியுள்ளனர். ஆனால் அதே வேளை, தமிழரின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் நாம் தான் என தலை




நிமிர்ந்து நின்ற பிரதான அரசியல் கட்சி தேர்தலில் சற்றுப் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

கட்சி ரீதியிலும், விருப்பு வாக்குகளின் ரீதியிலும் வாக்கு வங்கி சரிந்துள்ளதைக் காணமுடிகின்றது. எதிர்காலத்தில் தமது கொள்கைகளை நேரிய வழியில் கடைப்பிடித்து, நேர்மையான அரசியலை நடாத்தும்படி தமிழ் மக்கள் இக்கட்சிக்குக் காட்டிய அபாய சமிக்ஞையாகவே இத்தேர்தல் முடிவை கணிக்கவேண்டியுள்ளது.

இம்முறை தேர்தலில் சரிவைச் சந்தித்த பிரதான இக்கட்சி தமிழ் மக்களின் ஆன்மாவில் என்றுமே அழியாத இடத்தைப் பிடித்திருந்தது. அதற்கு பல காரணங்கள் உண்டு.

***தமிழ் மண்ணை***
***தியாகத்தால் உரமூட்டி***
***செந்நீரால் குளிப்பாட்டி***
***கண்ணீரால் நீராட்டி***

உயிர்ப்படையச் செய்தவர்களின் தியாக சிந்தையில் உருவான தத்ரூபமான கொடையென்றே இக்கட்சியினை தமிழ் மக்கள் தம் மனங்களில் பூசித்தனர். ஆனால் கொள்கைகளிலும், போக்குகளிலும் இடர்பாடுகள் ஏற்பட்டபோது தமிழ் மக்களைத் நேசித்த பலர் தமிழ் மக்களின் சுயத்தை நிலைநாட்ட அரசியல் பாதையில் அடியெடுத்து வைத்து தமிழ்த்தேசியக் கொள்கைகளுடன் புதிய கட்சிகளை அமைத்து தம்மை நிலைநிறுத்திக் கொண்டு இன்று வெற்றிவாகையும் சூடியுள்ளனர்.

எது எவ்வாறாக இருப்பினும் தமிழ் மக்கள் சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதே இன்று தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள வினாவாகும். கட்சிக் கொள்கைகளில் சிறிதளவேனும் பிசகாது, கட்சி சார்ந்த பூசல்களில் ஈடுபட்டு பாரதி கூறியதுபோல் "தாளம் படுமோ தறிபடுமோ" என தமிழ்க் கட்சிகள் முட்டிமோதாது, தமிழர்களின் தேசியத்தையும், சுயத்தையும் பாதுகாக்க கரம் கோர்த்துச் செயற்படவேண்டிய காலத்தைக் கருத்திற்கொண்டே தமது ஒவ்வொரு காலடியையும் எடுத்து வைக்க வேண்டும். கண்ணீர் விட்டே வளர்த்தோம்; கருகத் திருவுளமோ...?

முன்னைய காலங்களில் பெரும்பான்மை இனத்தவர்கள் தமது அரசியல்

**இ.இ.வசீகரன்**

பீடத்தை நிலைநிறுத்த சிறுபான்மை இனத்தவரின் ஆதரவை வேண்டி நின்ற காலம் இப்பொழுது கடந்து விட்டது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலும், நேற்று நடந்து முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலும் இதை வெட்ட வெளிச்சமாக அறைந்துள்ளது. இந்நிலையில் சிறுபான்மை இனத்தவர்களான நாம் எமது சுயத்தை, எமது உரிமையை நாம் தான் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் செல்கின்ற எந்தக் கட்சியினராக இருந்தாலும் கட்சி பேதங்களை மறந்து தாம் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை உணராதவிடத்து இம்முறைத் தேர்தலில் பெற்றுக்கொண்ட கசப்பான படிப்பினைகளை அடுத்த தேர்தலிலும் பெறவேண்டிவரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஏனெனில் தமிழ் மக்கள் இன்று தெளிவான அரசியல் சிந்தனையில் உள்ளனர். சிலரை சிலகாலம் ஏமாற்றலாம், சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம், ஆனால் எல்லாரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது.

***இதயம் எங்கே அச்சமின்றி உள்ளதோ,***
***எங்கே தலை நிமிர்ந்து நிற்கிறதோ,***
***சிறைவாசமின்றி***
***அறிவு வளர்ச்சிக்கு***
***எங்கே பூரண***
***விடுதலை உள்ளதோ,***
***குடும்பத்தின் குறுகிய தடைப்பாடுகளால்***
***வெளி உலகின் ஒருமைப்பாடு***
***எங்கே உடைபட்டு***
***துண்டுகளாய்ப்***
***போய்விட படவில்லையோ,***
***வாய்ச் சொற்கள் எங்கே***
***மெய்நெறிகளின்***
***அடிப்படையிலிருந்து***
***வெளிப்படையாய் வருகின்றனவோ,***
***விடாமுயற்சி எங்கே***
***தளர்ச்சியின்றி***
***பூரணத்துவம் நோக்கி***
***தனது கரங்களை நீட்டுகிறதோ,***
***அடிப்படை தேடிச் செல்லும்***
***தெளிந்த அறிவோட்டம் எங்கே***
***பாழடைந்த பழக்கம் என்னும்***
***பாலை மணலில்***
***வழி தவறிப்***
***போய்விட வில்லையோ,***
***நோக்கம் விரியவும்,***
***ஆக்கப் பணி புரியவும்***
***இதயத்தை எங்கே***
***வழிநடத்திச் செல்கிறாயோ, - அந்த***
***விடுதலைச் சுவர்க்க பூமியில்***
***எந்தன் பிதாவே!***
***விழித்தெழுக***
***என் தேசம்!***

என்ற ரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலிப் பிரார்த்தனையை தமிழ் மக்களாகிய நாமும் மௌனத்தில் பிரார்த்திப்போம்.

# தேர்தல் - 2020 முடிவுகள்

## முன்னுரை

நான் அரசியல் ஆய்வாளன் அல்ல. நான் ஒரு சாதாரண இந்நாட்டு மகன் என்ற முறையிலே தேர்தல் முடிவுகளைப் பார்க்கின்றேன்.

## நிராகரிப்பப்பட்ட வாக்குச் சீட்டுக்கள்

எனது கவனத்தை முதலில் ஈர்த்தது நிராகரிக்கப்பட்ட ஒட்டுமொத்தமான தொகை பிரமிக்க வைக்கின்றது. இலட்சக் கணக்கான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டு மக்கள் புத்தியில்லாதவர்களா? அன்றேல் வாக்குச் சீட்டு குழப்பியதா? வாக்குச் சீட்டின் நீளம் இந்த நாட்டின் நீளத்தை விட அதிகமாக உள்ளது போன்ற ஒரு தோற்றம்!! சின்னங்களைப் பார்த்தால் தலை சுற்றுகின்றது. யானை, மொட்டு, வெற்றிலை பாக்கு, கை, சயிக்கிள், மாம்பழம், தொலைபேசி ( இது கையடக்கத் தொலைபேசியா அன்றேல் Land Line தொலைபேசியா?) வீடு மக்களை இவை குழப்பாது விடுமா?

வட அமெரிக்கா போன்ற ஒரு பெரிய கண்டத்தில் இரண்டு கட்சிகள் மட்டும்தான் உள்ளன. பாராளுமன்ற ஆட்சி முறைக்குத் தாயாக விளங்கும் ஆங்கில நாட்டில் மூன்று கட்சிகள் மட்டுமே உள்ளன. ஆனால், இந்தச் சிறு தீவில் ஆளுக்கொரு கட்சியா? சுதந்திரம் பெற்ற பின்னர் எங்கள் நாட்டு அரசியல் ஓரளவு நன்றாகவே இருந்தது. S.W.R.D பண்டாரநாயக்க பிரதமராக விரும்பி குறுக்கு வழியில் சென்றது தொட்டு, இந்நாட்டு அரசியல் ஒரு கீழ்த்தரமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருப்பது வரலாறு.


## சுயேட்சைகள்

ஒரு காலகட்டத்தில் தெற்கில் பல சுயேட்சைகள் போட்டியிட்டார்கள். பாராளுமன்றத் தேர்தலில் இந்தச் சுயேட்சைகள் தெற்கில் குறைய வடக்கில் இம்முறை கூடியது. இதன் அர்த்தமென்ன? தமிழர் வமுக்கத்தில் இதைப் பண்பாடென்பதா? கலாசாரமென்பதா? என்பதில் எனக்கு விளக்கம் குறைவு. உடன் கட்டை ஏறுவதுண்டு அதாவது மனைவிக்கு முன்னர் கணவன் இறந்தால், கணவனைச் சுடுகாட்டில் எரிக்கும் பொழுது மனைவி உடன்கட்டை ஏறி - அதாவது அந்த நெருப்பில் தன்னையும் இணைத்துக் கொள்வாள். இந்தப் பழக்கம் இல்லாதுபோனது நல்ல விடயம்.

இந்தக் காலத்தில் விதவைகள் மறுதிருமணம் செய்து கொள்வது ஒரு வழக்கமாகி விட்டது. இதில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. ஆனால் இன்று விதவைகள் அரசியலில் உடன்கட்டை ஏறுவது ஒரு வழக்கமாக மாறி வருவது அரசியலுக்கு நன்மையா? மக்களுக்கு நன்மையா? என்பது விவாதத்திற்குரியது. யார் இந்த சுயேட்சைகள்? இவர்களுக்குப் பின்னால் தெளிவுக் கட்சிகளின் ஆதரவுண்டா? வெற்றி பெற வாய்ப்பில்லை என்று தெரிந்தும் இவர்கள் ஏன் தேர்தலில் குதித்து தமிழரின் பலத்தைக் குறைக்கிறார்கள்? யானையின் தும்பிக்கை அறுபட்ட நிலையிலும், வடக்கில் ஒரு யானை தோன்றியது. இவர்களுக்கு அரசியல் அறிவில்லையா?

## மாற்று அணி

கூட்டமைப்புக்கு எதிராக ஒரு மாற்று அணி தேவையென்று புத்திஜீவிகள் வடக்கில் கூறினார்கள். அதில் ஓர் உண்மை உண்டு. ஆனால் அந்த மாற்று அணி எது? அதற்குத் தலைமை தாங்குவது யாரென்று ஏன் அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை? விக்னேஸ்வரன் அந்த மாற்று அணிக்குத் தலைமைத்துவம் கொடுப்பாரென்ற எண்ணம் வடகிழக்குத் தமிழரிடம் குறைந்து கொண்டே போனது. இதைத் தேர்தல் முடிவுகள் தெளிவாக்கிவிட்டன. இவரைப் பற்றிய




பல கேள்விகளைச் சென்றவாரம் காவலனில் நான் எழுப்பியுள்ளேன்.

## கூட்டமைப்பு

ஒரு வலுவான கட்சியாக சென்ற தேர்தலில் கூட்டமைப்பு பாராளுமன்றம் சென்றது. இன்று ஒரு பெரும் பின்னடைவு கண்டுள்ளது. இது ஏன்? என்ற உண்மையான சுய விமர்சனம் செய்வார்களா? புத்தி ஜீவிகளை உள்வாங்கி மேற்கொண்டு எந்தப் பாதையில் செல்வதென தெளிவடைவார்களா? அன்றேல், ஒவ்வொரு தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் சென்ற கூட்டமைப்பு சிறிது சிறிதாகத் தமிழர் தாயகத்தையும் தமிழர்களையும் தெற்கு அரசியல் வாதிகளுக்கு விற்றுக் கொண்டிருப்பார்களா?

சுமந்திரன், சிறிதரன், சித்தார்த்தன் நீண்ட இழுபறிகளில் பிரசவ வேதனையில் தங்கள் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார்கள். இதையிட்டு இவர்கள் சிந்திப்பார்களா? தங்கள் பாதையை மாற்றுவார்களா?

இம்முறை அம்பாறை பறி போனது. இன்னுமோர் ஜனநாயகத் தேர்தல் இருந்தால் திருமலையும், முல்லைத்தீவும் பறிபோகுமா? கூட்டமைப்பு இதற்கு உடன் போகுமா? தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல தலைமைத்துவமும் பல ஆண்டுகளாகக் கிடைக்காதது தமிழரின் ஒரு துர்ப்பாக்கிய நிலை.

## ஐக்கிய தேசியக் கட்சி

ரணில் மானம் ரோஷம் இருந்தால் எப்பொழுதோ அரசியலில் இருந்து விலகி இருக்க வேண்டுமென்று சென்ற காவலனில் தெளிவாக எழுதியிருந்தேன்.

இந்தத் தேர்தலில், மக்களால் அவர் தூக்கி எறியப்பட்டுவிட்டார். அவமானத்துடன் அரசியலில் இருந்து போக வேண்டிய நிலையை அவரே தன்மேல் சேற்றைப் பூசிக்கொண்டார்.

## அரசியல் மேதை

தெற்கிலும் சரி, வடக்கிலும் சரி ஓர் அரசியல் மேதை இன்னமும் இந்த நாட்டில் தோன்றவில்லை. செல்வநாயகம் வடக்கிலும், டட்லி சேனநாயக்கா தெற்கிலும் ஓரளவாவது அந்த நிலைக்கு வந்தார்களே! அதன் பின்னர், அரசியலில் ஒரு நல்ல தலைமைத்துவம் இல்லாதது இந்த நாட்டின் வறுமை.

## தேர்தல் வெற்றி

அரசியல் எதிர்வு கூற்றையும் மீறி இராஜபக்சாவினர் அமோக வெற்றி பெற்றுள்ளார்கள். இந்த வெற்றிக்குப் பின்னால், மீண்டும் சிங்கள பௌத்த இனமதத் துவேஷம் மேலோங்கியதா? வெளிநாட்டு ஈடுபாடுகள் ஏதாவது உண்டா? டொனால் ரம் - கிலாறி கிளின்ரன் ஜனாதிபதித் தேர்தலில், அரசியல் அனுவபம், வெளிநாட்டு அரசியல் கொள்கைகளின் அனுபவம் பெற்ற கிலாறி கிளின்ரன் தான் வெற்றி பெறுவார் என்பது பலருடைய எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் வெள்ளைத் தோலுடைய தென்னகக் கிறிஸ்தவர்களின் ஆதிக்கமும், ரஷ்யாவின் இரகசிய

**கரவையூர்ச் செல்வம்**

ஈடுபாடும் டொனால்ட் ரம்புக்கு ஆதரவாக இருந்தது என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதினார்கள். இன்று வரை ரஷ்சிய நாட்டு ஈடுபாடு நீதிமன்றத்தில் வரவில்லை. டொனால்ட் ரம் அதைத் தடுத்து வருகிறார்.

## இரண்டு வழிகள்

இராஜபக்சாக்களின் அமோக வெற்றி எதிர்க்கட்சியை வெகுவாகப் பாதித்து விட்டது. எதிர்க்கட்சியில் இருப்போர் கொள்கையைக் கடைப்பிடித்து எதிர்க்கட்சியிலே இருப்பார்களா, அன்றேல் கொப்பு விட்டு கொப்புத் தாவும் குரங்கு போல் சுயநலத்திற்காக தங்களைத் தெரிவு செய்த மக்களையும் ஏமாற்றி ஆளும் கட்சியைத் தழுவுவார்களா? கடந்த காலங்களில், இவ்வாறு தழுவிய வரலாறு உண்டு. ஒரு வலுவான எதிர்க்கட்சி இல்லையென்றால், ஜனநாயகம் வாழாது. ஆகவே, மொட்டில் போட்டியிடாது வெற்றி பெற்றோர் அனைவரும் ஒன்று கூடி, நாட்டு மக்களின் நன்மை கருதி ஒரு வலுவான எதிர்க்கட்சியை அமைப்பார்களா?

அரசின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவளித்து அரசு தடம் புரண்டு போகும் வேளைகளில் மக்கள் சார்பில் குரல் கொடுப்பார்களா? பொது ஜன பெரமுன இந்த ஆளுமையான சந்தர்ப்பத்தைத் தவற விடாது, போர்க் குற்றங்களை அடையாளங்கண்டு, தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டு, உரிய நிவாரணங்களை வழங்கி விசாரணை இன்றி வதங்கி வாடி இருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்து, பெரும் பான்மை, சிறுபான்மை என்ற வேற்றுமையை முழுதாக அகற்றி, எல்லோரும் இந்நாட்டு மக்கள் எனக் கருதி, அனைவரையும் அரவணைத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டு வளர்ப்பார்களா? பெரமுன நினைத்தால் (Will to do it) செய்யலாம். அந்த அதிகாரம் பெரமுனையின் ஆட்சியில் குவிந்திருக்கின்றது. அன்றேல், மேலும் சிங்கள பௌத்த வாதத்தை வளர்த்து, மக்களைப் பிரித்து இன்று நாடிருக்கும் மோசமான நிலையில் இருந்து இன்னமும் மோசமான ஒரு நிலைக்கு எடுத்துச் செல்வார்களா? அதுவும் அவர்களால் முடியும். அது அவர்களுக்கும் கைவந்த கலை. மகிந்தாவுக்கு போரின் வெற்றியின் பின்னர் அவ்வகையான ஒரு வாய்ப்பு இருந்தது. அதை அவர் தவற விட்டு விட்டார். இப்பொழுது இரண்டாவது முறையாக ஒரு வாய்ப்பு வந்துள்ளது. இம்முறையும் அதைத் தவறவிடுவாரா? அங்ஙனம் இச்சந்தர்ப்பத்தைத் தவற விடுவாரானால், இன்னுமோர் ஜனநாயகத் தேர்தல் நடைபெறுமா? அன்றேல் சிம்பாவேயில் நடைபெற்றது போன்று ஒரு கட்சித் தேர்தல் தான் நடைபெறுமா? அதுவே நாட்டின் பேரழிவு.

## நல்ல கள்வர்கள்...

கல்வாரி மலையில்
கிறிஸ்து இயேசு
சிலுவையில் அறையப்பட்டபோது
இடப்பக்கத்தில் ஓர் கள்வனும்
வலப்பக்கத்தில்
மற்றுமோர் கள்வனுமாக
இரு சிலுவைகளில்
இரு கள்வர்கள் தொங்கினார்கள்
ஒரு கள்வன்
கிறிஸ்து இயேசுவைப் பரிகசித்து
நீர் தேவகுமாரனானால்
சிலுவையிலிருந்து இறங்கி வரும்படியும்
தம்மையும் மீட்கும்படியும்
வேண்டுகோள் விடுத்தான்...
ஆனால் மறு கள்வனோ
தான் செய்த அதர்மத்திற்கு
தான் துன்புறுவதாகவும்
தர்மத்தின் வடிவான கிறிஸ்து
ஏன் துன்பப்படவேண்டும் எனவும்
மனச்சாட்சியைத் தட்டிக்
குரல் எழுப்பியபோது
அவன் ஆன்மா பேசியது
**"ஆண்டவரே!**
**அரசுரிமையோடு நீர் வரும்போது**
**அடியேனை நினைவுகூரும்"**
சட்டென்று வந்தது இயேசுவின் பதில்
**"இன்றைக்கே நீ என்னோடு**
**வான்வீட்டில் இருப்பாய்"**

பரபரப்பான தேர்தல் களம்
ஓய்வுகண்டு அமைதி பெற்றுள்ளது
பலர் அரசுரிமை பெற்றுள்ளனர்
சிலர் அரசுரிமை இழந்துள்ளனர்
அடியவரை நினைவுகூர
வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன
கூட்டுச் சேர்வும் இடம்பெறலாம்
இடப்பக்கமாக இருந்தாலும் சரி
வலப்பக்கமாக இருந்தாலும் சரி
நேரிய பாதையில்
ஜனநாயகம் நோக்கி
ஆசியாவின் அதிசயமாக
இலங்கைத் தேசம்
தலைநிமிருமா...?

**வ.கரன்**

# காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(மணி, யாழ்ப்பாணம்)*
**கேள்வி: இலங்கையின் வரலாற்றில் முதன் முதலாக 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தொகையான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுவதற்கான காரணங்கள் என்னவோ?**

**ப:** பல காரணங்கள் இருக்கின்றன! ஒன்று, பணம்பெற்றுத் தேர்தலில் நிற்கவேண்டும் என்பதற்காக நின்றவர்கள்! இரண்டு, 'கொள்கை' என்று பிடிவாதத்தில் நின்று பொது நலனுக்காகத் தங்களை தியாகம் செய்ய இயலாது தனிக்கட்சியாகத் தேர்தலில் போட்டியிட்டவர்கள். மூன்று, தங்களைப் பற்றிய பெரிய நினைப்பினால் நின்றவர்கள்!

*(மேனகா, யாழ்ப்பாணம்)*
**கே: அரசியல் பிரச்சாரங்களில் கட்சி பேதங்கள் இன்றி எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எல்லோருமே மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம், அபிவிருத்தி அடையச் செய்வோம், வேலை வாய்ப்புக்களை வழங்குவோம், அவற்றுக்கான திட்டங்கள் எல்லாம் கைவசம் இருக்கின்றன என்றெல்லாம் கூறித்தள்ளினார்கள். இவற்றையெல்லாம் செய்வார்களா?**

**ப:** இவையெல்லாம் தேர்தல்கால உறுதிமொழிகள். தேர்தல்கால உறுதிமொழிகள், தேன்நிலவுக்கால உறுதிமொழிகள் போன்றவை. அவை அக்காலத்திற்கு மட்டும் உயிர் வாழ்பவை! அக்காலத்தில் மட்டும் உயிர் வாழ்பவை! அக்காலத்தைக் கடந்ததும் அவை பொதுவாகக் காலாவதியாகிவிடும்!

*(மதன், மன்னார்)*
**கே: 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை வைத்துக்கொண்டு பேரினவாதிகள் தமிழர்களைப் பிரித்தாள்வதில் வெற்றி கண்டுள்ளார்கள் என்று கொள்ளலாமா?**

**ப:** 2020 நாடாளுமன்றத் தேர்தலோடு மட்டுமல்ல, அவர்கள் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே நம்மைப் பிரித்துப் பிளவுபடுத்துவதில் வெற்றிகண்டு வருகின்றார்கள். இதுதான், அவர்கள் நம் அடையாளத்தை அழிக்கக் கையாளும் ஓர் அணுகுமுறை! இதனை நன்றாக அறிந்துகொண்ட பின்னரும் இதற்கு அணிசேர்க்கின்றவர்களும், அணிசெய்கின்றவர்களும், அணிவகுப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்! இது நம்மவர்களில் ஏற்கனவே நன்றாகத் தொற்றியிருக்கும் ஒருவகைத் தொற்று! மேலும், நண்டு கொழுத்தாப் பொந்துக்குள்ள இருக்காது என்பார்கள். அதுபோல, சமூகத்தில் கொஞ்சம் அங்கீகாரம் கிடைத்துவிட்டால் தனித்தனியே கச்சேரி நடத்தத் தயாராகி விடுகின்றார்கள் நம் தரப்பினர்!

(அன்ரன், மன்னார்)
**கே: உண்மையாக மனம் திறந்து இக்கேள்வியைக் கேட்கிறேன்! வடகிழக்கில் உள்ள தமிழ் அரசியல் வாதிகள் ஏன் இத்தனை பிரிவுகளாக நின்று தேர்தலில் போட்டியிடுகின்றார்கள்?**

**ப:** பிரிந்து நிற்பது நம்மவர்களின் பிறவிக் குணம்! பிறவிக் குணத்தினை மாற்றமுடியுமா!?

*(நிலா, யாழ்ப்பாணம்)*
**கே: நல்ல தம்பதிகள் எப்படி இருக்கவேண்டும்?**

**ப:** அண்மையில் எங்கோ படித்த ஞாபகம்! நல்ல தம்பதியர் யாரென்றால், 'அவர திருத்த முடியாது!' என்பதை உணர்ந்த மனைவியும் 'இவள்ட கதைக்க ஏலாது!' என்பதைப் புரிந்துகொண்ட கணவனும்!

(யோசப், யாழ்ப்பாணம்)
**கே: அடிக்கடி கோபம் வருகின்றது. எண்ணுவதால் கோபம் வராது என்று கூறுகின்றார்கள்! உண்மையா?**

**ப:** அதில் நிறைய உண்மை இருக்கின்றது! எண்ணும்போது அதன் எண்ணிக்கை நீங்கள் யாரோடு கோபப்படுகின்றீர்கள் என்பதைப் பொறுத்தது! அவர் சிறுவனாக இருந்தால் பத்துவரை எண்ணுங்கள். அவர் உங்களுக்குச் சமனான ஆளாக இருந்தால் இருபதுவரை எண்ணுங்கள். அவர் உங்களைவிட பலசாலியாக இருந்தால் ஐம்பதுவரை எண்ணுங்கள். அவரே உங்கள் மனைவியாக இருந்தால் எண்ணிக்கொண்டே இருங்கள். நிறுத்தி விடாதீர்கள்!

(மேரி, வவுனியா)

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

**கே: மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. இருப்பினும் நாம் வாழும் காலம் மிக வேகமாக மாறிவருகின்றதே! இப்படியே போனால்!?**
**ப:** உண்மைதான் மேரி. வங்கிகளிலும் அலுவலகங்களிலும் பெரிய கடைத் தொகுதிகளிலும் நிற்கும் காவலாளிகள் அங்கு வெவ்வேறு தேவைகளுக்காக வரும் மருத்துவர்களின் உடல்வெப்ப நிலையைப் பரிசோதித்துத்தான் உள்ளே அனுமதிப்பார்கள் என்பதை நாம் எப்போதாவது சிந்தித்தோமா? இல்லையே! ஆனால், நிகழ்கின்றது. ஆம், மாற்றம்! கற்பனைக்கு அப்பாலும் நடந்தவண்ணமே இருக்கின்றது.

*(நாதன், கிளிநொச்சி)*
**கே: வடகிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றைய கட்சிகளை விடக் கூடிய ஆசனங்களால் வெற்றி பெற்றாலும் கணிசமான வாக்குகளை இழந்திருக்கின்றன அல்லவா!?**
**ப:** எருமைகள் தம் இனத்திற்குள் முட்டி மோதிக்கொண்டிருக்க இதனைச் சந்தர்ப்பமாகப் பாவித்து சிங்கங்கள் அவற்றை வேட்டையாடக் காத்திருக்கின்றன. இது தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் இன்றைய பரிதாபக் கதை!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: வடகிழக்கு தமிழ்மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றம் செல்லும் உறுப்பினர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?**
**ப:** மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றம் செல்லும் நீங்கள் மக்களின் அபிலாசைகளை எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுங்கள். மக்களை எக்காலத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் விற்றுவிடாதீர்கள் என்பதுதான்!

*(அன்ரனி, யாழ்ப்பாணம்)*
**கே : நடந்து முடிந்த 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடகிழக்கில் பத்து ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றதனை தமிழ் தேசிய கூட்டமைப்பின் வெற்றியாகக் கருத முடியுமா?**
**ப :** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாண்டு 2020ல் பத்து ஆசனங்களைப் (327,168 வாக்குகள்) பெற்றுள்ளது உண்மைதான். ஆனால், 2015ல் பதினாறு ஆசனங்களையும் (515,963), 2010ல் பதின்நான்கு ஆசனங்களையும் (233,190), 2004ல் இருபத்திரெண்டு ஆசனங்களையும் (633,654), 2001ல் பதினைந்து ஆசனங்களையும் (348,164) பெற்றதை வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய சரிவைச் சந்தித்து வருகின்றது என்பதை சரியாகக் கணித்து, கடந்த காலங்களில் விட்ட தவறு களை ஏற்றுக்கொண்டு, அவற்றை நிவர்த்தி செய்து முன்னேறவில்லை என்றால் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நிலையை அடையும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். ஆகவே 2020ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக்கொண்ட ஆசனங்களை வைத்துக்கொண்டு மார்பு தட்டினால் இத்தேர்தலில் பழம்பெரும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு நடந்த கதியே இவர்களுக்கும் அடுத்தடுத்த தேர்தல்களில் ஏற்படலாம்!

*(ஜான்சி, மன்னார்)*
**கே: 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து தமிழர் தரப்பு கற்றுக்கொள்ளக்கூடிய பாடம் என்ன?**
**ப:** தமிழர் தரப்பு கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உண்டு. ஆனால், அவற்றை அவர்கள் கற்றுக் கொள்வார்களா என்பது சந்தேகமே! இருப்பினும் ஒரு பாடத்தைத் தருகின்றேன். "ஒன்றுபட்டால் இவர்களுக்கும் நமக்கும் உண்டு வாழ்வு" !

(கலையரசி, கிளிநொச்சி)
**கே: நூற்றிநாற்பத்தைந்து ஆசனங்களைப் பெற்று எதிர்பாராத பெரும் வெற்றியை ஆளுங்கட்சியான பொது ஜன பெரமுன பெற்றிருக்கிறது. இனி என்ன நடக்கப்போகிறது?**
**ப:** கலையரசி, ஏற்கனவே நடந்ததுதான் இன்னும் தீவிரமாக நடக்கப்போகிறது!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ,** anpuomi1970@gmail.com **என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு** sms, viber **அல்லது** whatsapp**க்கோ அனுப்பி வைக்கலாம்.**

# வாழ்க்கையில் கவலையா? மகிழ்ச்சியா?



**வன்னி வாழ் இதயம் ம.சூசைமுத்து**

கவலைப்படுவதால் உங்களில் எவர் தமது உடல் உயரத்தோடு ஒருமுழம் கூட்ட முடியும். உடைக்காக நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? காட்டு மலர்ச்செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கவனியுங்கள். அவை உழைப்பதும் இல்லை நூற்பதுமில்லை. ஆனால் சாலமோன் கூடத் தமது மேன்மையில் எல்லாம் அவற்றில் ஒன்றைப் போலவும் அணிந்திருந்ததில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

நம்பிக்கை குன்றியவர்களே! இன்றைக்கு இறந்து நாளை அடுப்பில் எறியப்படும் காட்டுப் புல்லுக்குக் கடவுள் இவ்வாறு அணி செய்கிறார் என்றால் உங்களுக்கு இன்னும் அதிகமாகச் செய்யமாட்டாரா?

ஆகவே எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எனக் கவலை கொள்ளாதீர்கள். ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவர். உங்களுக்கு இவையாவும் தேவையென உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையதையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் சேர்த்துக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளைய கவலை அன்றன்றுள்ள தொல்லையே போதும்...

கவலை இல்லாத மனிதன் உலகத்தைத் தெரிந்தவன், நன்கு புரிந்தவன். கவலை இல்லாத மனிதன் என்ற முன்னை நாள் திரைப்படப் பாடல் நினைவுக்கு வருகிறது. அதேவேளை கவலையில்லாத மனிதன் யாராவது உண்டா...?

ஒரு காலத்தில் ஒரு சமயப் பெரி யார் ஒருவரிடம் ஒரு தாயானவள் இறந்துபோன தன் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு அவரிடம் வந்து ஐயா! என் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை தாரும் என வேண்டுதல் செய்தாள். அந்தப் பெரியாரும் ஒருகணம் யோசித்துவிட்டு, அம்மா! நீங்கள் இறப்பு நடவாத ஏதாவவொரு வீட்டில் இருந்து ஒரு பிடி அரிசி வாங்கிக்கொண்டு வாருங்கள் உங்கள் குழந்தைக்கு உயிர்ப்பிச்சை தருகிறேன் எனக் கூறி அத்தாயை அனுப்பினார்.

அவளும் புறப்பட்டு வீடு வீடாக, நகர், தெருவென எங்கும் அலைந்தாள். ஏமாற்றத்துடன் திரும்பி வந்து தனது இயலாமையைக் கூறினாள். இதுதான் உலகத்தின் நியதி என்று அந்தப் பெரியவர் கூறினார்.

எம் அன்றாட வாழ்வில் கவலை முக்கியமானதொரு அம்சமாக ஏற்படுகிறது. காலையில் கண்விழிக்கும் போதும் மாலையில் கண்மூடித் தூங்கும் போதும் கவலையுடன் தான் தூங்குகின்றோம். (தொடர்ச்சி 11ம் பக்கம்)



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்க ஆண்கள் பாடசாலைகள்**

ஏற்கனவே அவர்களால் உருவாக்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்ட சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து காலப்போக்கில் அவர்களுக்கென மேலும் கூடுதல் பயிற்சி வழுங்கி அவர்களை மறை ஆசிரியர்களாகவும் மட்டுமல்ல திருப்பணியாளர்களாகவும் ஏற்படுத்த எண்ணியுள்ளோம். இன்னும் சில அருட்சகோதரர்கள் வரும்போது அவர்கள் பொறுப்பில் பெற்றோர் இல்லாத மாணவர்களை (கொலரா போன்ற அந்நாட்களில் அடிக்கடி பரவிய நோய்களால் கணிசமான பெற்றோரை இழந்த பிள்ளைகள் இருந்தனர்) ஒப்படைத்து அவர்களுக்கு மறையறிவைப் புகட்டுவதுடன் ஒரளவு தொழிநுட்பக் கல்வியையும் வழுங்கவுள்ளோம். தற்போதைக்கு இப்படியான மாணவர்கள் ஒரு சுதேச ஆசிரியரின் உதவியுடன் எங்கள் மறைப்பணியாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளனர்.

**பெண்கள் பாடசாலைகள்**

ஆண்கள் பாடசாலைக்குச் செய்தது போலவே ஐரோப்பிய, சுதேச, கிறிஸ்தவ, கிறிஸ்தவரல்லாத குடும்பங்களிலுள்ள பெண்பிள்ளைகளுக்கும் செய்ய முயன்று கொண்டிருக்கின்றோம். பல விதத்தில் புரட்டஸ்தாந்து பெண்கள் பாடசாலையை விட எங்கள் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை சிறப்பாக பல வருடங்களாக இயங்கிக்கொண்டிருந்தாலும் எங்கள் பெண்கள் பாடசாலையை இன்னும் சிறப்பாக இயங்கவைக்க (இச்செயற்பாடு இவ்விடத்துப் பாரம்பரியங்களுக்கு ஏற்புடையதாக இல்லாவிட்டாலும் இங்கு இன்னமும் பல பெற்றோர் தமது பெண்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதை ஏதோ ஏற்புடைய செயலாகக்கருதுவதில்லை) முயன்று கொண்டிருக்கின்றோம். இங்குள்ள மக்கள் பொது வாக மென்மைப் போக்குடையவர்களாக, திருமண வாழ்வில்லாத கன்னித்துவ வாழ்வுக்குப் பழக்கபடாதவர்களாக இருக்கும் நிலையில் பெண்கல்வியூடாகக் கன்னித்துவ வாழ்வின் மேன்மையை அவர்களுக்கு உணர்த்த விரும்புகின்றோம். ஏற்கெனவே சில வருடங்களுக்கு முன் சில பெண் துறவிகளை இங்கு வந்து பணியாற்ற நாம் அழைத்திருந்தோம். அப்போது சில தடைகள் குறுக்கிட்டதால் அவர்களால் வரமுடியவில்லை. ஆயினும் கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி அவர்கள் வெகு விரைவில் இங்கு வருவார்கள் என்ற நல்லசெய்தி கிடைத்துள்ளது. எனவே ஐரோப்பிய மற்றும் சுதேச கன்னியர்க

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

ளுக்கான ஒரு மடம், மற்றும் ஐரோப்பிய, ஐரோப்பிய சுதேச கலப்பின மற்றும் சுதேச பிள்ளைகளுக்கான பாடசாலை, பெற்றொரையிழந்த கத்தோலிக்க, கத்தோலிக்கரல்லாத பெண்பிள்ளைகளுக்கான ஒரு இல்லம், கத்தோலிக்க திருமறையில் சேர்வதற்கு ஆயுத்தம் செய்யும் பெண்களுக்கானதொரு இல்லம் மற்றும் இயலுமானால் ஆபத்திலுள்ள பெண்களுக்கான காப்பகம் ஒன்றும் அமைப்பதற்கு ஒரு விசாலமான தோட்டம் உள்ள காணியைக்கொள்ளனவு செய்துள்ளோம்.

**யாழ் திருத்தூது மாவட்டத்தில் மறைக் கல்வி - புதிய முயற்சிகள்**

சில வருடங்களுக்கு முன் ஆங்கிலத்திலிருந்து ஒரு மறைக் கல்வி நூல் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு கொழும்பில் அச்சிடப்பட்டது. அனேகமாக ஆயர் பெற்றக்கினி அங்கு ஒரு குருவாகப் பணியாற்றிய காலத்தில் அவர் மேற்கொண்ட முயற்சியினாலேயே இது கைகூடியது. இதைவிடச் சிறிய மறைக்கல்வி நூல் ஒன்று கோவா ஒரட்டோரியன் சபைக் குருக்களால் பல வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததொன்றும் பாவனையிலுள்ளது. ஆயினும் இது எல்லா விடயங்களையும் உள்ளடக்கியது என்று கூறமுடியாது. கடந்த சில வருடங்களாக (இந்தியாவில் உள்ள தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட) பாண்டிச்சேரி மாநிலத்தில் அவ்விடத்திலுள்ள ஆயர் ஒருவரின் ஒப்புதலுடன் அச்சேற்றப்பட்ட மறைக்கல்வி நூலின் பிரதிகளைக் கொள்வனவு செய்து பயன்படுத்துகின்றோம். இம்முயற்சிகளுக்கப்பால் திருத்தூது மாவட்டம் முழுவதும் ஒரு ஒருமைப்பாடு இருக்கவேண்டுமென்பதற்காக சிறியோருக்கும் வளர்ந்தோருக்கும் ஒரு மறைக்கல்வி நூல் ஒன்று தயாரிக்கும் பொறுப்பு பொன்ஜீன் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆயினும் இவர் திருத்தூது மாவட்டத்தின் பொதுவான கல்வி வளர்ச்சியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திப் பல கட்டுரைகளையும், பிரசுரங்களையும் வெளியிட வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளானதால் மறைக்கல்வி நூலைத்தயாரிக்கும் பணியை முன்னெடுத்துச்செல்ல முடியாது போனது.

**1861ல் யாழ் திருத்தூது மாவட்டத்தில் பணியாற்றி வந்த மறைபணியாளர்கள்**

யாழ் திருத்தூது மாவட்டத்தில் திருத்தூது முதல்வர் ஆயர் ஸ்ரீபன் செமேரியா நீங்கலாக இப்போது 23 மறைபணியாளர்கள் பணியில் உள்ளனர். இவர்களுள் ஒருவர் இத்தாலிய புனித பிலிப்பு நேரியார் ஒரட்டோரியன் சபையைச் சேர்ந்தவர் ஸ்பானிய தேசத்தின் சிஸ்டர்சியன் சபையைச் சேர்ந்த இருவர் திருத்தூது மாவட்டத்தை சேர்ந்த சுதேசக்குருக்கள் இருவர் மற்றும் அமல மரித்தி யாகிகள் சபையைச் சேர்ந்த 18 பேரும் அடங்குவர்: *(தொடரும்...)*

# அழகியல்



அழகு என்பது புதிய உளவியல் சிந்தனையின்படி எமது கண்ணோட்டத்தில் தான் தங்கியுள்ளது. அதாவது எந்தவொன்றையும் அது அழகானது என நினைத்தால் அது அழகானதாயும் அழகற்றது என நினைத்தால் அது அழகற்றதாயும் காட்சியளிக்கும். இதனையே கௌதம புத்தர் பின்வருமாறு கூறுகின்றார். ***"உங்களது சிந்தனைகள் பொருட்களை அழகாகவோ அன்றேல் அழகற்றவையாகவோ காட்டுகின்றன. முழு உலகும் எங்கள் மனத்தில்தான் உள்ளது. எமது மனப்பான்மையே துன்பத்தை இன்பமாகவும் இன்பத்தைத் துன்பமாகவும் எடுத்துக்கொள்கின்றது"*** என்று சீரியமுறையில் சிந்திப்பதற்கான வழிகாட்டலை முன்வைத்தார் சுபாஸ் சந்திர போஸ்.

**மனத்தூய்மை**

மனிதன் தனது மனத்தை எப்பொழு தும் தூய்மையாக வைத்து இயங்கவேண்டும். மனத்திலிருந்து தூய்மை இழக்கப்படும்பொழுது மனம் வருத்தத்திற்கும் வேதனைக்கும் உள்ளாக்கப்படுகின்றது. உடல் அழகை நீரினால் அல்லது கழுவுவதற்கான பொருட்களினால் மாற்றுவது சுலபம். ஆனால் மனத்தைத் தூய்மைப் படுத்துவது கடினம்.

"பாலை வனத்தில் பயிர் ஏது? அதுபோல பாழ்பட்ட மனதில் சிந்தனைக்கு இடமேது? உரிமை உணர்ச்சி ஏது? எதுவும் கூறமுடியாது" என்று அறிஞர் அண்ணா எதிர்வு கூறினார்.

"நெல்லைக் குற்றும்பொழுது அவ்வப்போது குற்றுவதை நிறுத்திவிட்டு உமி போயிற்றா என்று பார்ப்பதுபோல மனதை இடையிடையே சோதித்தல் வேண்டும். எடுத்த தீர்மானம் சரியா என்று அடிக்கடி சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்" என்று ஸ்ரீ இராமகிருஸ்ணர் சிறப்பாக மொழிந்தார்.

அழகியற் கலைகளை மனத்தில் பதித்தவர்களாய் உங்கள் வாழ்வில் இன்பம் காண இனிதே முனையுங்கள். இதய இராகங்களை இசைத்து இதயத்தில் களிபேருவகை கொள்ளுங்கள். உங்களை ஏற்றுக்கொண்டு வாழ்வியற் கல்விக்கு விளக்கம் கொடுங்கள். உங்களில் நிலவும் அழகினை நிறைவாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஒரு வீட்டில் தனியே இருந்த மனைவியைப் பார்த்துக் கணவர் கூறினார்: "என் அன்பே, ஆருயிரே, உனது அழகில் மயங்குகிறேன். நீ இல்லாமல் நான் இல்லை. என் வாழ்வின் முழுமை நீயே தான்." அதே பெண் வெளியே போகும் பொழுது, அவளது தோற்றப்பாட்டைச் சகிக்கமுடியாத ஒருவர் தனது நண்பனிடம் கதறுகின்றார்:

"இதோ பார் ஓர் உருவம். அவலட்சணத்தின் அடையாளம். இதுகளெல்லாம் வீட்டில முடங்கிக் கிடக்க முடியாமல் தெருவில திரியுதுகள்."

ஒரு பெண் இருவராலும் முரண்பட்டநிலையில் விமர்சிக்கப்படுகின்றாள். ஒருவரால் 'அழகி' என அழைக்கப்படுகின்றவர்' 'அவலட்சணம்' என இன்னொருவரால் விமர்சிக்கப்படுகின்றார். அழகின் இரகசியம் அங்க அமைப்புக்களில் அல்ல, புறத்தோற்றப்பாட்டில் அல்ல, மாறாக அவரின் தூய்மையில், ஆளுமைக் கவர்ச்சியில் சக மனிதர்கள் மீது காட்டும் உண்மையான அன்பில் தங்கியுள்ளது.

"ஒரு முறை ஒரு மாணவன் என்னிடம் வந்தான். தன் தலையைக் காட்டி என்னுடைய முடிவெட்டு எப்படி இருக்கின்றது?" என்றான். நான் அதற்குப் "பரவாயில்லை" என்று பதில் அளித்தேன். அப்போது அம் மாணவன் "இப்போது இது தான் ஸ்ரைல்" என்று தனது உள்ளக்கிடக்கையை உறுதிப்படுத்தினான். ஆனால் அவன் மொட்டைதான் அடித்திருந்தான்.

***"வெள்ளை நிறப் பூவுமல்ல, வேறெந்த***
***மலருமல்ல, உள்ளக் கமலமடி***
***உத்தமனார் வேண்டுவது"***

என்கின்றார் விபுலானந்தர். அழகின் இரசனை கண்களில் அல்ல, இதயங்களிலேயே உதயமாகின்றது.

**நியதிகள்**

1. இயல்பாக நடந்து கொள்ளுங்கள்.
2. இயற்கையோடும், இறைவனோடும் இணைந்து செயற்படுங்கள்.
3. இதயபூர்வமான உறவினை வளர்த்துக்கொள்ளுங்கள்.
4. ஆளுமைக் கவர்ச்சியை வளர்த்துக் கொள்ளுங்கள்.
5. பாரபட்சமில்லாத அன்பினைப் பகிருங்கள்.
6. பணிவோடும்,பண்போடும்பழகுங்கள்.
7. சீராகச் சிந்தியுங்கள்.
8. அமைதியைப் பதிவு செய்யுங்கள்.

**அகவயப் பண்பு**

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது ஒரு முதுமொழியாகும். அகம் அழகாக இருக்கும் போது முகம் அழகாக இருக்கும். அவர்கள் எப்போதுமே ஆனந்தத்தை அள்ளிச் சுவைப்பவர்களாகவும், மகிழ்ச்சியை அள்ளிக் கொடுப்பவர்களாகவும் இருப்பர். பிறப்பு நிலையில் பலர் தமக்குள்ளே முரண்பட்ட ஆளுமையைக்கொண்டவர்களாய் அமைதியின்றி அல்லற்படுவார்கள். அவர்கள் கடும் வார்த்தைப் பிரயோகங்களால் பிறரை இம்சித்து, கட்டிய மனைவியைத் தூசித்து, அவமானப்படுத்துவதில் இன்பம் காணுவார்கள்.

ஒருமுறை எனக்கு வேண்டப்பட்ட நண்பர் ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அங்கே எதிர்பாராத விதமாக அவருடைய

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக்**

மனைவியைச் சந்திக்க நேர்ந்தது. பரிதாபகரமானநிலையில் இருந்தார். அவரை அணுகி வினவியபோது அவர் சவப்பெட்டி ஒன்றை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து தன்னை அடித்துத் துன்புறுத்தி, அந்தச் சவப்பெட்டியில் போட்டுப் புதைக்கப்போவதாகக் கூறினார். மனிதன் போதையில் பாதை தவறி ஞானத்தை மறந்து நடக்கின்றார் என்று தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினார்.

மறுநாள் காலையில் சந்தித்தபோது அவர் தன்னுடைய அன்பிற்குக் கட்டுப்பட்டு சவப்பெட்டியை ஏதாவது ஏழைக்குடும்பத்துக்கு அன்பளிப்பாக வழங்குமாறு கடைக்காரரிடம் ஒப்படைத்துவிட்டார் என்று கூறினார். "கல்லுக்குள் ஈரம்" என்பது இவர் வாழ்வில் புலப்பட்டது.

"என் புருசன் மிக நல்லவர், அவர் குடிக்காமல் இருக்கும்போது எனக்கு வேண்டியதெல்லாம்செய்துதருவார். சிலவேளைகளில் எனது உடுப்புக்களைக் கழுவித் தருவதோடு சமையலும் செய்து தருவார். குடிக்காமல் அவர் தொடர்ந்து வாழ்ந்தால் அவரை எனது செல்லப் பிள்ளையாகச் சொந்தம் கொண்டாடுவேன்" என்று உற்சாகத்தோடு தனது கணவனின் சிறப்பான பண்புகளை அன்பொழுகச் சொன்னார். மாறியது நெஞ்சம். மாற்றியது யாரு? எல்லோரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நல்லவர்களாகவோ அன்றேல் தீயவர்களாகவோ திகழ்வதில்லை. அவ்வப்போது சந்தர்ப்பத்திற்கேற்ப மாறிக்கொள்கிறார்கள். நல்லவர்களாகவே எல்லோரும் வாழவிரும்புகிறார்கள். நல்லவர்களாக எல்லோரையும் வாழவைக்க வாய்ப்புக்களை வழங்குவதே எமது சிப்பான செயலாக அமைகின்றது.

**புறவயப் பண்பு**

திட்டமிட்ட முறையில் காரியங்களை முன்னெடுப்பது, சூழல்மாசடையாமல்பாதுகாப்பது, நல்லோர் வாழும் சூழலாகச் சுற்றாடலை மாற்றியமைப்பது போன்றவை புறவயம்சார் நிலையில் அழகியல் கட்டுமானப் பணியை முன்னெடுக்க உதவுகின்றன. எனவே,

- நீங்கள் நீங்களாகவே இருப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரியுங்கன்.
- நிறைகாண் மனப்பான்மையில் உங்களையும் பிறரையும் எதிர் கொள்ளுங்கள்.
- நிகழ்காலத்தில் வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.
- நிலையான சொந்தமாகிய இறைவனிடம் நீங்காத பந்தம் கொள்ளுங்கள்.
- நிதர்சன உண்மையை அன்றாடம் தரிசனம் செய்யுங்கள்.
- நடிப்பதை விட்டுவிட்டு நல்லோர் வாழும் சூழலை உருவாக்குங்கள்.
- நல்ல நட்பிற்குப் புது வடிவம் கொடுங்கள்.

கௌதம புத்தர் கௌரவமாக மொழிந்தார்:

*'எமது சிந்தனைகளே பொருட்களை அழகாகக் காட்டுகின்றன. எமது சிந்தனைகளே பொருட்களை அழகற்றவையாகக் காட்டுகின்றன. முழு உலகும் எங்கள் மனதிலேதான் உள்ளது."*



# முடிவெடுப்பதும் சந்தோசமான வாழ்வும்



முடிவெடுப்பதில் திறமையாக இருந்தால் சந்தோசமாக வாழலாம். ஏன் என்னால் முடிவெடுக்க முடியவில்லை என்று குழம்புகின்றீர்களா? சிலர் பெரிய விடையங்களுக்கும் மிக இலகுவாக முடிவெடுத்துவிட்டு சந்தோசமாக இருப்பார்கள். நீங்கள் இலகுவாக முடிவெடுக்க எப்படி அதைக் கையாளலாம் என்று பார்ப்போம். நாம் முடிவெடுப்பதில் மூன்று முறைகளில் முடிவெடுக்கின்றோம்.

**1] மனசுக்குப் பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள்**
**2] புத்திக்குப் பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள்**
**3] மனசுக்கும் புத்திக்கும் பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள்**

**1) மனசுக்குப் பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள்:**

மனசுக்கு பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள் புத்தியைப் பயன்படுத்துவதில்லை. இப்படிப்பட்டவர்கள் எப்படி உருவாகிறார்கள் என்றால் சிறு வயதில் பெற்றோர் ஒரு இடத்தில் உட்காரு என்றால் உட்காராது. தன்னுடைய மனதுக்குப் பிடிச்சதைத் தான் செய்யும். பெற்றோரின் சொல் பேச்சு கேட்காது. அம்மாவிடம் ஒன்று கேட்டால் அம்மா அதைக் கொடுக்கவில்லை என்றால் அப்பாவிடம் போய்க் கேட்டுப் பெற்றுக்கொள்ளும். நேரத்துக் ஏற்றால் போல மாறும் தனது தேவையை நிறைவேற்றிக்கொள்ள மனசுக்குப் பிடித்தபடி முடிவெடுத்து வாழ்பவர். கூட இருப்பவர்கள் சொல்வதைக் கேட்க மாட்டார்கள். கூட இருப்பவர்களை அதிகமாக கஸ்ரப்படுத்துவார்கள். பாடசாலையில் சேர்க்கும் போது இந்த பாடசாலையிலதான் சேர்க்கவேண்டும் என்று அடம் பிடிப்பார்கள். இறுதில் பெற்றோரின் விருப்பத்திற்கு எதிராக தனக்குப் பிடிச்ச இந்தப் பையனைத் தான் திருமணம் முடிப்பன் என்று மனசுக்குப் பிடித்தபடி திருமணம் செய்து இரண்டு வருடத்திற்குப் பின் விவாகரத்தில் வந்து வீட்ட நிற்பார்கள். வாழ்வில் பெரிய அடி விழும். மனக்கஸ்ரம் வரும் அதன் பின்னர் புத்தியைப் பயன்படுத்தலாம்

**2) புத்திக்குப் பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள்:**

அறிவுக்குப் பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள் மனதைப் பயன்படுத்துவதில்லை. இப்படிப்பட்டவர்கள் எப்படி உருவாகிறார்கள் என்றால் சிறு வயதில் பெற்றோர் ஒரு இடத்தில் உட்காரு என்றால் உட்காரும். அப்படியே செய்யும். மனதைப் பயன்படுத்தாது. தன் மனதிற்கு எது பிடித்திருக்கிறதோ அதைச் செய்யாது. உதாரணத்திற்கு ஒரு பலூனைக் கொடுத்து உடைக்காமல் வைத்திரு என்றால் நீண்ட காலம் வைத்திருக்கும். மனசுக்குப் பிடிச்ச விடையத்தைச் செய்யாது. நல்லபிள்ளை என்ற பெயரை பெற்றோரிடம் இருந்து பெற்றுக் கொள்ளும். ஆனால் பிள்ளையின் மனம் மிகவும் கஸ்ரப்படும். மனசுக்குப் பிடிக்காமல் வேலையை தன் அறிவைப் பயன்படுத்திப் பெற்றுக் கொள்ளும் ஆனால் ஒரு வருடத்துக்குள் வேலையை விட்டுவிட்டு வீட்ட வந்து இருந்துவிடுவார்கள். அறிவைப் பயன்படுத்துவார்கள் ஆனால் வேலை மனதிற்கு பிடிக்காததால் ஒழுங்காக வேலை செய்யமாட்டார்கள்.

**3) மனசுக்கும் புத்திக்கும் பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள்:**

மனசுக்கு பிடிச்சபடி முடிவெடுப்பவர்கள், வாழ்பவர்கள் தங்களைச் சுத்தி இருப்பவர்களை மிகவும் கஸ்ரப்படுத்துவார்கள். தாங்கள் நல்லாக இருப்பார்கள். புத்திக்குப் பிடிச்சபடி முடிவெடுப்பவர்கள் அல்லது வாழ்பவர்கள் தாங்கள் மிகவும் கஸரப்பட்டுக்கொண்டு தங்களைச் சூழ உள்ளவர்களை மிகவும் திருப்திப்படுத்துவார்கள். இரண்டையும் கலந்து முடிவு எடுக்கணும். மனசு பாதி, புத்தி பாதி. மனசுக்கு பிடித்தபடி வாழாவிட்டால் அதிக நோய் வரும் முடிவு எடுக்க மன உறுதி வேண்டும்.

மனசுக்கும் புத்திக்கும் பிடிச்ச மாதிரி முடிவெடுப்பவர்கள் நிம்மதியாக சந்தோசமாக வாழலாம்.

அருட்பணி இ.செ.விஜேந்திரன் அ.ம.தி
இயக்குனர்
உளவளத்துணை நிலையம்

உங்களுக்கு இருக்கும் 10 பிரச்சினைகளை எழுதுங்கள் அதில் ஒரு பிரச்சினையை எடுங்கள் அதற்கு மனசு என்ன சொல்லுகிறது. என்ன பக்க விளைவுகள் வருகின்றன. என்ன பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்று தெளிவாக ஆராய வேண்டும். அதேபோல புத்தியின் படி முடிவெடுத்தால் என்ன பக்க விளைவுகள் வருகின்றன. என்ன பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்று தெளிவாக ஆராய வேண்டும். இவை இரண்டிலும் எது பாதிப்புக் குறைவாக இருக்கிறதோ அதன் பக்கம் சார்ந்து முடிவெடுப்பது நல்லம்.

எங்களில் பலர் பணம் சம்மந்தமான விடயங்களில் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து முடிவெடுத்துவிட்டு நிம்மதியை இழக்கின்றோம். மனத்தின் படி முடிவெடுத்தாலும் பாதிப்பு புத்தியின்படி முடிவெடுத்தாலும் பாதிப்புநானெப்படிமுடிவெடுப்பது என்றுயோசிக்கின்றீர்களா? எதில் பாதிப்புக் குறைவாக இருக்கின்றதோ அந்தப் பக்கம் முடிவெடுக்கலாம்.

**கவலை:** நாங்கள் வாழ்வில் எடுத்த முடிவுகள் தப்பு அல்லது தவறு என்று நினைத்தால் அது கவலையாகின்றது. இவை அதிகமாக இறந்த கால முடிவுகளாக இருக்கலாம்.

**குழப்பம்:** இன்று, இந்தக் கணப்பொழுதில் முடிவெடுக்க முடியாமல் இருந்தால் அது குழப்பம் ஆகும். நிகழ்காலத்தில் ஏற்படும்.

**பயம்:** நாளைக்கு என்ன நடக்குமோ என்று நினைக்கும் போது இதைக் கற்பனை செய்து பார்க்கும் போது ஏற்படுவது. இது எதிர்காலத்தில் ஏற்படும்

எனவே கவலை, குழப்பம், பயம், இவை மூன்றும் இல்லாமல் நாங்கள் முடிவு எடுத்தால் அது மிகச் சரியான முடிவாக இருக்கும். மன நிம்மதியை சந்தோசத்தைத் தரும். முடிவெடுப்பதில் திறமையாக இருந்தால் நோய்கள் இன்றி மகிழ்ச்சியாக வாழலாம்.

மனதில் ஓடும் எண்ணங்களைக் கண்டுகொள்ளத் தேவையில்லை. ஏனென்றால் விஞ்ஞான ஆராய்ச்சிகளின் படி ஏறத்தாழ 60,000 எண்ணங்கள் ஒவ்வொரு நாளும் எமது மனதில் தோன்றுகின்றன. அது ஒரு சுப்பர் மாக்கட் (Super Market) போல எது தேவையோ எடுத்துக்கொண்டு எது தேவையில்லையோ அவற்றை விடலாம்.

இது நடந்தால் சந்தோசம் இல்லை அதை அடைய எடுக்கும் முயற்சி அல்லது பயணம் சந்தோசத்தைக் கொடுக்கும் மனம் வேறுபட்டது அறிவு வேறுபட்டது. மனம் எப்படி முடிவெடுக்கும் என்றால் பிடிச்சது பிடிக்காதது. அறிவு எப்படி முடிவெடுக்கும் என்றால் எது நல்லது கெட்டது. எனவே இரண்டையும் ஒன்று சேர இணைத்து முடிவெடுத்தால் வாழ்வு சந்தோசமாக அமையும்

# அனுபவமே ஆன்மீக வாழ்வின் அடித்தளம்



அருட்பணி நிர்மலராஜ் [செ.தா]

**முன்னுரை**

மானிட வாழ்வு என்பது அனுபவங்களின் கோர்வை என்பார்கள். மண்ணில் வாழும் எல்லா மனிதர்களுமே தம் வாழ்வில் பலரை, சில நிகழ்வைச் சந்திக்கும் போது பலவித பாதிப்புக்களுக்குள்ளாகி உடல் உணர்வுகள், சிந்தனைகள் மற்றும் ஈடுபாடுகளில், பல பாடங்களைக் கற்று கொள்கின்றனர். அனுபவங்கள் இவ்வுலக வாழ்வில் இன்றியமையாதவை மட்டுமல்ல, அவற்றின் தொடர்ச்சியும் தொகுப்புமே மனித வாழ்வு என்றால் மிகையாகாது.

**அனுபவம் என்பது என்ன?**

அனுபவம் என்பது ஒரு வகை அறிவு. அறிவு பல வகைப்படும். ஏட்டறிவு, கேட்டறிவு, ஆய்வறிவு, உள்ளறிவு, புலனறிவு என்பன முக்கியமானவை. அனுபவம் என்பது நல்ல தமிழில் பட்டறிவு எனப்படும். பட்டு+அறிதல் என்னும் இரு சொற்களின் இணைப்பே பட்டறிவு என்னும்சொல். அனுபவத்தின் உண்மையை உணர்த்துகின்றது.

அனுபவம் என்றால் ஒருவர் தானே பட்டு அறிதல். நேரடியாக அவரை தொட்டு உணர்தல். அதாவது ஒரு ஆளுடன், பொருளுடன் நிகழ்வுடன் நேரடித் தொடர்பு கொண்டு பெறும் அறிவே அனுபவம். இதனால் தான் அன்பை அனுபவித்தவன் அன்பர் ஆகின்றார். அழகை அனுபவித்தவன் கலைஞன் ஆகின்றான். ஈகையை அனுபவித்தவன் வள்ளல் ஆகின்றான். இறைவனைத் துய்த்தவர் புனிதர் ஆகின்றார். அனுபவம் என்னும் பட்டறையில் தான் உன்மைகள் உறுதிப்பாடுகள் ஆகின்றன. இலட்சியங்கள் பிறப்பெடுத்து நம் இருப்பைச் சிந்திக்கத் துாண்டுகின்றது.

**இறை அனுபவத்தைத் தேடி**

மனித வாழ்வின் வரலாற்றில் மக்கள் இறை நம்பிக்கையும் சமயங்களையும் உருவாக்குதலில் அனுபவங்கள் உன்னத இடத்தை வகிக்கின்றது.

உ+ம் : அருளாளர் ஒருவர் அவரது தலைமையில் இயங்கும் குழுவினர் பெற்ற ஆழமான இறை அனுபவத்தில் இருந்து தான் ஒரு கொள்கை நிறை வாழ்கை முறை பிறக்கின்றது. அந்த அனுபவத்தை சடங்குகள், கொண்டாட்டங்கள், வாழ்க்கைமுறைகள் மூலம் பிறரும் வாழ்வு பெறும் பொருட்டு வாழ்வதன் மூலமே, அவை வள ரும். மக்களுக்கு அனுபவத்தை அளிக்க மறுக்கின்றபோது, மக்களுக்கு அவற்றின் மீது ஈடுபாடு அற்றுப்போகின்றது. இன்று மரபு சார்ந்த சமயங்கள் பல இருந்தாலும், அவைகள் சுடர் இல்லாத விளக்காக சுவை இல்லாத உப்பாக உயிர் இல்லாத உடலாக இருக்கின்றது.

இன்றைய மானிட வாழ்வின் தேடல்களில், இறை அனுபவத்தை தேடுவது என்பது உண்மையான நம்பிக்கையும், உள்ளார்ந்த உறுதிப்பாடும் நிறைந்ததாக உள்ளது.

அரண்மனை ஆடம்பர சுகங்களை விட்டுசாதா ரண வாழ்வில் துன்பத்தை நோயைச் சந்தித்த அனுபவமே, கௌதமசித்தார்த்தரை புத்தராக மாற்றியது.

மோகன்தாஸ் கரம் சந்காந்தி இந்தியர் எனும் காரணத்தால், தென்னாபிரிக்காவில் முதல் வகுப்பு ரயில் வண்டியிலிருந்து வெளியேற்றப்பட்ட உச்ச அனுபவமே, அவரை மகாத்மா காந்தியாக மாற்றியது.

கொல்காத்தா நகரில் சேரிப்புறத் தெரு ஓரத்தில் சாகக்கிடந்த முதியவரை சந்தித்த அனுபவமே, அன்னை திரேசா என்ற உன்னத நிலைக்கு உயர்ந்தியது. இங்கு இறை அனுபவம் என்பது நம் வாழ்வின் ஊற்றாகவும், இறுதி நிறைவாகவும் கடந்து நிற்க்கும் மறைபொருளாகவும், உடனிருக்கும் பேரன்பாகவும் விளங்கும் தெய்வத்தின் உன்னத உறவை உணர்த்துவது.

"மாசில் வினையும் மாயை மதியமும் வீசுதென்றலும் வீங்கின வேனிலும், மூசு வண்டறை, பொய்கையும் போன்றதே ஈசன் என்ற இறையடி நிழலே" என்ற தேவார வரிகள் இயற்கை மெய்மைகளில் அப்பர் பெற்ற இறை அனுபவத்தை எடுத்துரைக்கின்றது.

பரிசுத்த விவிலியத்தில் "மோயீசனின் அழைப்பு" (3:1-12) (எரியும் புதரில் விடுதலைக் கடவுளை சந்தித்தது.) இறைவாக்கினர் எசாயா (6:1-10) (திருப்பீடத்தில் இறைவனின் துாய்மையின் மாட்சியை அனுபவித்தது" இதற்கு சான்றுகளாகும்.

இயேசுவின் பணி வாழ்வில் சீடர்கள் மட்டுமல்ல, சாதாரண மக்கள், கூட இறை அனுபவம் பெற்றதற்கு சான்று.

"நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியுள்ளார், கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கின்றார்."

- (லூக் 7: 16)

என்பது இறை அனுபவத்தின் சாரம்.

**முடிவுரை**

நமது வாழ்வில் அனுபவத்திலிருந்தும், அனுபவத்தை நோக்கியும், பேசும் போது தான் பேச்சு அர்த்தம் பெறுகின்றது. நாம் கடந்து வந்த வாழ்கைப் பாதையில் அனுபவித்த துன்பங்கள், வேதனைகள், இழப்புக்கள் ஏராளம். மேலும் கொரோனா வைரசினுடைய தாக்கங்கள், நம் வாழ்வில் மட்டுமல்ல, உலக மக்களின் வாழ்கையிலும் பல்லாயிரம் பாடங்களைக் கற்றுக்கொடுத்திருக்கின்றது.

எனவே வாழ்வின் நிலையாமையை, நிதானமாக சிந்தித்து, நிகழ்கால வாழ்வில் இறைஅனுபவத்தைப் பெற முயற்சி செய்வோம். நம்முடன் வாழ்பவர்களில், நமது அயலவர்களில் இறை பிரசன்னத்தை காண முயல்வோம்.

# 31ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
08.09.1938

இறப்பு
14.07.2020

## அருட்பணி R.M.G.நேசநாயகம்

"சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்தில் மறவாதீர்கள்"

எம் வாழ்வின்
வேராக இருந்தவரே
நேசத் தந்தையே!
வாழ வைத்த தெய்வமே!

உமக்கு ஒருபோதும்
மரணம் இல்லை
எம் இதயங்களில்
என்றும் இருக்கின்றீர்
இறைவனில் இளைப்பாறும்

உயரப்புலம், ஆனைக்கோட்டை

**கோவிலம்மா குடும்பத்தினர்**

# 40ம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம் :- 21.11.1935** **மறைவு :- 28.07.1980**

**அருட்பணி**

## ஜோ பெர்னாண்டோ

**யாழ்ப்பாணம் மறைமாவட்டம்**

**குருத்துவத்திருநிலை : 01.09.1962**

**'உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்."**

**உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிகாண இறைவனை இரந்து மன்றாடுகின்றோம்**

**பிரிவால் துயருறும் :**
**குடும்பத்தினர்.**

## குருபரன் மீதான....

(12ம் பக்கத்தொடர்ச்சி)

பல்கலைக்கழகப் பேரவையும் செயற்பட்டிருப்பது போலத் தென்படுகிறது. பல்கலைகழகப் பேரவை தமது சுயாதீனத் தன்மையை இழந்துவிட்டது போலத் தென்படுகின்றது.

குருபரன் அவர்களை நீக்குவதற்காகவே அவசரம் அவசரமாகச் சட்டங்களில் மாற்றங்களைச் செய்து முன்னர் சில விதிமுறைகளின்படி வழக்குகளில் ஆஜராகலாம் என்றிருந்த சட்டங்களில் மாற்றம் செய்யப்பட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வழக்குகளில் ஆஜராகுவதற்கு முற்றாகத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதுவிதமான வலுவான நீதியான காரணமுமின்றி தமது மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்படும் சட்டத்தரணி ஒரு-வரை அவர் ஆஜராகியிருக்கும் வழக்கிலிருந்து அப்புறப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கை கோழைத்தனமானது. அத்துடன் குருபரனது இழப்பு சட்டத்துறைக்கு மட்டுமல்ல கடந்த பல வருடங்களாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கு நீதி கிடைப்பதை இன்னும் தாமதமாக்கும் என்றும் குருபரன் என்ற தனிப்பட்ட இலங்கைக் குடியுரிமை பெற்ற ஒருவரது அடிப்படை உரிமைகளை மீறும் ஒரு செயற்பாடு எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். என அவ்வறிக்கை அமைகின்றது

# 31 st Day Remembrance In Treasured Memory of



## APPUCUTTY THAMPU CLEMENT GEORGE

**Birth :- 21/08/1941 Death :- 08/ 07/2020**

***"I Called You by name you are mine"***

(Isaiah 43.1)

**Your life was a Blessing,**
**Your memory a Treasure,**
**You are loved beyond words,**
**And missed beyond measure.**

Sadly missed prayerfully
remembered by ever loving
wife Devi George and loved ones.

**42/1,E.S. Fernando Mawatha, Colombo 06.**

## வாழ்க்கையில்....

(8ம் பக்கத் தொடர்ச்சி..)

இடைப்பட்ட நேரத்தில் என்னென்ன கவ-லைகள். சிறுவர் முதல் பெரியோர் வரை, பணக்காரர் முதல் ஏழைகள் வரை அவர வருக்குரிய கவலைகள் எவ்வளவோ?

உண்ண உணவு இல்லையே எனக் கவலை ஒருவருக்கு, உண்ட உணவு சமிபாடு அடையவில்லையே என்ற கவலை ஒருவருக்கு. வேலை கிடைக்கவில்லையே என்ற கவலை ஒருவருக்கு, கிடைத்த வேலைக்கு ஊதியம் போதாது என்ற கவலை இன்னொருவருக்கு... இவ்வாறு கவலை கவலை எங்கு நோக்கினும் கவலை, யாரைப் பார்த்தாலும் கவலை.

அதனால் தான் நற்செய்தியில் இயேசு இவ்வாறு கூறுகிறார் "எதை உண் போம், எதைக் குடிப்போம், எதை உடுத்து வோம் என நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் வானகத்தந்தைக்கு உங்கள் தேவைகள் அனைத்தும் தெரியும். எனவே முந்த முந்த இறையரசையும் அதற்கு ஏற்புடையதையும் தேடுங்கள். நாளைய கவலையைப் போக்க நாளை வழிபிறக்கும் என்றார்.

இன்று உலகமெங்கும் பல கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள், பல்வேறு நிறுவனங்களை நிறுவி, தொண்டு புரியும் இயேசு சபை சுமார் 460 ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய புனித லொயேலா இஞ்ஞாசியாரும் அவருடைய தோழர்களும் பிச்சை எடுத்துத் தான் அச்சபையை உருவாக்கினார்கள். இந்தக் காலத்திலும் அகில உலகம் எங்கும் பணியாற்றி வருகின்ற அன்னை தெரேசா சபையானது அது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அன்னையிடமிருந்த பணம் மிகச் சொற்பமே. பணத்தைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டதாக வரலாறுகள் இல்லை. மாறாக கிறிஸ்துவின் பணியைச் செய்வதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவர்களுடைய தேவை-களை ஆண்டவரே நிறைவு செய்தார்.

இறைவனை நம்பினோர் எந் நேரத்திலும் கைவிடப்படுவதில்லை. ஆகவே மனித அமைதியைக் கொள்ளை அடிக்கும் கவலைகளிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.

உள்ளத்திலே அமைதி பிறக்க வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்க ஒவ்வொரு நாளும் எம்மைப் பராமரித்துப் பாதுகாத்து ஆசீர் வழங்கும் இறைவன் வெளிப்படுத்திய பரிசுத்த வேதாகமத்தை வாசித்துத் தியானித்து உள்ளம் உருகச் செபம் செய்வதே சிறந்த வழி.

**சிந்தனைக்கு:**

கவலைகள் கிடக்கட்டும் மறந்து விடு
காரியம் நடக்கட்டும் துணிந்து விடு
படைத்தவர் இறைவன் பார்த்துக் கொள்வார்
பதட்டமின்றிப் பாடுபட்டால் பலன் கிடைக்கும்
பதறாதே மனம் தளராதே - முயற்சி எடு

விண்ணக வாழ்வின்

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14
•
04
•
1985

மறைவு
19
•
08
•
2016

*அமரர்*

## *செல்வன். றெஜிஸ் செல்வநாதன் மெறில் கிளின்ரன்*

"வாருங்கள் என் தந்தையின் ஆசிபெற்றவர்களே,
உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு
உங்களுக்கு உரிமையாகும்" (லூக்,23:43)

**உன்சிந்தனையில் ஆயிரம் எண்ணங்களோடு வளர்ந்த எங்கள் அன்பு மகனே!**
**வையகத்தில் வாழலாம் என்று வந்து பாதியில் எங்களை விட்டுச் சென்றிரே!**
**உம் அழகு முகமும் புன்சிரிப்பும் எம்மை விட்டகன்று**
**நான்கு ஆண்டுகளாயிற்ரே! ஓயா கண்ணீர் விழிகளுடன்,**
**இறைஞ்சுகின்றோம் இறைவனை, உம் ஆன்ம ஈடேற்றத்துக்காய்**

235, கடற்கரைத்தெரு
நீர் கொழும்பு
031-222 5327
0779929511

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு அம்மா
தம்பி, மைத்துனி மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்

# 25ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
10
03
1934

இறப்பு
24
08
1995

## அமரர் பாக்கியம் ஞானப்பிரகாசம்

இருபத்தைந்தாண்டுகள்
கடந்து போனதம்மா...
மறந்து போகவே முடியவில்லை - உம்
புன்னகை ததும்பும்
பூமுகம்
எம் மனக்கண்ணில் என்றும்
அழியா நினைவுகளாய்...

மறந்து போகவே முடியவில்லை - உம்
வாழ்வின் ஒரு வரியைக்கூட
அம்மா கடவுளில்
இளைப்பாறுங்கள்...

**மகன்: ஞா . விமலதாசன் (கனடா)**
**மகள்: ஜஸ்ரினா ஜோர்ஜ் (ஜேர்மனி)**
**மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,**
**சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள்**

**ஊர்காவற்றுறை**

குறைந்த செலவில் உங்கள் குடும்ப விழாக்களை உங்கள் உறவுகளுடன் கொண்டாடி மகிழ சிறந்த இடம்
**"பாதுகாவலன் மண்டபம்"**

# அமலமரித்தியாகிகள் சபைக்குப் புதிய குருக்கள்

யாழ் மாகாணத்திற்கு அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த மூன்று திருத்தொண்டர்கள் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஒகஸ்ட் 25ம் திகதி புனித மரியன்னை பேராலயத்தில் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

திருத்தொண்டர் **ஆசைதாஸ் யேசுரட்ணம் ஜீவரட்ணம் அ.ம.தி**, திருத்தொண்டர் **சந்தியாப்பிள்ளை சந்திரதாஸ் அ.ம.தி**, திருத்தொண்டர் **கனியூட் பெனற் சிங்கர் அ.ம.தி** ஆகியோரே புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். புதிய குருவான அருட்பணி **சேவியர் ஜஸ்ரின்ராஜா அ.ம.தி** அடிகளார் கடந்த யூன் மாதம் 13ம் திகதி பதுளை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி வின்ஸ்டன் பர்னாந்து ஆண்டகையால் பதுளை புனித மரியாள் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.



**திருத்தொண்டர் சந்தியாப்பிள்ளை சந்திரதாஸ் அ.ம.தி** இவர் யாழ் மறைமாவட்டத்தின் மண்டைதீவு புனித பேதுருவானவர் பங்கைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை புஸ்பறோசலின் தம்பதிகளின் புதல்வனாவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் புனித யாகப்பர் மகாவித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கிளிநொச்சி குமுழமுனை வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, யாழ் புனித யோசப் வித்தியாலயம் என்பவற்றிலும் உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவு செய்து, குருத்துவ உருவாக்கத்திற்காக யாழ் புனித வளனார் சிறிய குருமடத்தில் இணைந்து கொண்டார். அடிகளார் தனது முதல் நன்றித் திருப்பலியை ஒகஸ்ட் மாதம் 27ம் திகதி மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் ஆசைதாஸ் யேசுரட்ணம் ஜீவரட்ணம் அ.ம.தி** இவர் யாழ் மறைமாவட்டத்தின் மண்டைதீவு புனித பேதுருவானவர் பங்கைச் சேர்ந்த ஆசைதாஸ் யேசுரட்ணம் தர்மராணி தம்பதிகளின் புதல்வனாவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் மண்டைதீவு றோ.க. வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கிளி. முழங்காவில் மகாவித்தியாலயம், மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலயம், மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயம், யாழ் புனித மரியாள் வித்தியாலயம், யாழ். கொழும்புத்துறை ஜோசப் வித்தியாலயம் என்பவற்றிலும் உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்று, யாழ் கொழும்புத்துறை புனித வளனார் சிறிய குருமடத்தில் குருத்துவ உருவாக்கத்திற்காக இணைந்து கொண்டார். அடிகளார் தனது முதலாவது நன்றித் திருப்பலியை ஒகஸ்ட் மாதம் 27ம் திகதி மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் கனியூட் பெனற் சிங்கர் அ.ம.தி** இவர் யாழ் மறைமாவட்டத்தின் பாஷையூர் புனித அந்தோனியார் பங்கைச் சேர்ந்த கனியூட் செபஸ்ரீனா தம்பதிகளின் புதல்வனாவார். இவர் தமது ஆரம்பக் கல்வியை மன்னார் மூன்றாம்பிட்டி அ.த.க. பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரி, யாழ். கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலயம் என்பவற்றிலும், உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவு செய்து குருத்துவ உருவாக்கத்திற்காக யாழ் புனித வளனார் சிறிய குருமடத்தில் இணைந்து கொண்டார். அடிகளார் தனது முதல் நன்றித் திருப்பலியை ஒகஸ்ட் மாதம் 26ம் திகதி பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.



**அருட்பணி சேவியர் ஜஸ்ரின்ராஜா அ.ம.தி** இவர் கடந்த யூன் மாதம் 13ம் திகதி பதுளை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி வின்ஸ்டன் பர்னாந்து ஆண்டகையால் பதுளை புனித மரியாள் பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் பதுளை வெலிமடை டயரபா தோட்டத்ததைச் சேர்ந்த சேவியர் நீற்றா தம்பதிகளின் புதல்வனாவார் இவர் தனது ஆரம்பக்கல்வியை பதுளை டயரபா பாரதி தமிழ் மகாவித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ் புனித யோசப் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவு செய்து குருத்துவ உருவாக்கத்திற்காக யாழ் புனித வளனார் சிறிய குருமடத்தில் இணைந்து கொண்டார். அடிகளார் தனது முதல் நன்றித் திருப்பலியை பதுளை வெலிமடை டயரபா தோட்டத்தில் ஒப்புக்கொடுத்தார்.

புதிய குருக்களை பாதுகாவலன் வாசக நேயர்கள் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்

# பணிப்பொறுப்பேற்புக்கள்

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் கடந்த மாத இறுதியில் பணியிடமாற்றம் பெற்ற குருக்கள் தம் புதிய பணிப்பொறுப்புக்களை யாழ். மறைமாவட்டக்குரு முதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் முன்னிலையில் பொறுப்பேற்றதைப் படங்களில் காணலாம்



அருட்பணி J. J. மவுலிஸ் அடிகளார் யாழ். மறைக்கோட்ட முதல்வராகவும் யாழ். மரியன்னை பேராலயப் பங்குத்தந்தையாகவும் பேராலயத்தில் பொறுப்பேற்கையில்.



அருட்பணி R.C.X. நேசராஜா அடிகளார் பாண்டியன் தாழ்வுப் பங்குத்தந்தையாகப் பாண்டியன்தாழ்வு அன்னாள் ஆலயத்தில் பொறுப்பெற்கையில்.



அருட்பணி S.A. ஜோர்ஜ் அடிகளார் புலோப்பளைப் பங்குத்தந்தையாக புலோப்பளை புனித பேதுருவானவர் ஆலயத்தில் பொறுப்பேற்கையில்.



அருட்பணி M.L தயாகரன் அடிகளார் யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழுவின் புதிய இயக்குநராகப் பணிப்பொறுப்பேற்கையில்

அருட்பணி எஸ்தாகு செபஸ்ரியன் அடிகளார் மாங்குளப் பங்குத்தந்தையாகப் பணிப்பொறுப்பேற்றுள்ளார்

*புதிய பணித்தளங்களில் இக்குருக்களின் பணி சிறக்க பாதுகாவலன் வாசக நெஞ்சங்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களும் செபங்களும்.*

# இளையோர் ஒன்றியத்தின் இரத்ததானமுகாம்

யாழ். மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான முகாம் 02.08.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு யாழ். மறைக்கோட்ட இளையோர் செயற்பாடுகளை வழிநடத்தும், புனித மரியன்னை பேராலய உதவி பங்குத்தந்தை அருட்திரு ஜெராட் அடிகளின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.





# அன்பியக் கருத்துக்கணிப்பு

இலங்கைக் கத்தோலிக்கத் திரு அவையில் அன்பியம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு எமது யாழ். மறைமாவட்டத்தில் அன்பியம் பற்றிய கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இவைபற்றிய விபரங்களைத் தொடர்ந்து வரும் **"பாதுகாவலனில்"** எதிர்பாருங்கள்.

# குருபரன் மீதான அழுத்தத்திற்கு நீதி சமாதான ஆணைக்குழு கண்டனம்

யாழ் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவராக விளங்கிவந்த குமாரவடிவேல் குருபரன் அவர்கள் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தமை எமக்குப் பெரும் அதிர்ச்சியான செய்தியாக உள்ளது. பல்வேறு ஆற்றல்களைக் கொண்ட ஒரு சட்டத்துறை வல்லுனரின் சேவை சட்டத்துறை மாணவர்களுக்கு மட்டுமன்றி யாழ் மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

நாவற்குழியில் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் ஆட்கொணர்வு மனு மீதான வழக்கில் இவர் ஆஜரானமைதான் இவரை நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் காரணமென அறிகிறோம். இவரை நீக்குவதற்கென்றே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் (U.G.C.) அவர்கள் கொடுத்த அழுத்தத்திற்கு அடிபணிந்த (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# கரித்தாஸ் - செடெக் நிறுவனத்தின் சிரேஸ்ட திட்ட முகாமையாளர் காலமானார்



கொழும்பு தேசிய கரித்தாஸ் செடெக் நிறுவனத்தின் சிரேஸ்ட திட்ட முகாமையாளராகக் கடந்த 29 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வந்த திரு க. தெய்வேந்திரராஜா (தேவா) அவர்கள் நோய் வாய்ப்பட்டு 05.08.2020 அன்று காலமானார்.

சிறப்பாக போர்க்காலத்திலும், சுனாமி இயற்கை அனர்த்தத்தின் போதும் வடக்கு கிழக்கு மக்களின் துயர்துடைப்புப் பணியிலே தம்மை முழுமையாக ஈடுபடுத்தித் துயருறுவோரின் வறியோரின் சுமைதாங்கியாக விளங்கிய அமரர் திரு க.தெய்வேந்திரராஜா (தேவா) அவர்களின் ஆன்மா இறைவனில் சாந்தியடைய இறைவனை மன்றாடுகின்றோம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.